Registered a Newspaper 08      விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05   திருவள்ளுவர் ஆண்டு 2025   மங்குனி 1   (14.3.94)   திங்கட்கிழமை   ஓசை 21

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் மூர்வீதி

## மலேரியா தொடர்ந்து பரவினால் ஒரு தலைமுறை நலிவடையும்

மலேரியா நோயின் பரவல் இதே நிலையில் தொடர்ந்து இருக்குமாயின் இன்னும் சில வருடங்களில் ஒரு தலைமுறை நலிவடையக்கூடும். ஆகையினால் இதை தடுக்கும் நடவடிக்கையில் மிகுந்த அக்கறை எடுக்கப்படவேண்டும்; இவ்வாறு வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்; யாழ்; குடாநாட்டில் மற்றைய நோய்களை விட மலேரியாவினால் தான் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நோயை தடுப்பதற்குரிய விழிப்புணர்வு அனைவருக்கும் வரவேண்டும். பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள், அதிகாரிகள், சமூக நிறுவனங்கள் மற்றைய ஸ்தாப (6ஆம் பக்கம் பார்க்க)

### [ தென்மாகாண சபை தேர்தல் ]

# ஐ. தே. கட்சி வெற்றி பெற்றால் யூலை மாதம் பொதுத் தேர்தல்

## ரகசிய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு

[கொழும்பு]

தென்மாகாண சபைத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியடைந்தால் உடனடியாக ஒரு பொதுத் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் "லங்கா தீப" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

அடுத்த யூலை மாதம் இத்தேர்தல் நடத்தப்பட இருப்பதாகவும், இதில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து ஐ. தே. க. வுடன் இணைந்தவர்களும் சுதந்திரக்கட்சியில் தற்போது உள்ள ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐ.தே.க. சார்பில் போட்டியிட இருப்பதாக அவ் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான தீர்மானத்தை அமைச்சரவை இரகசியமான முறையில் எடுத்துள்ளதாகவும் எனவே தென்மாகாண சபை தேர்தல் வெற்றிக்கு உழைக்குமாறு அமைச்சரவையின் சகலரிடமும் வேண்டுகோள் விடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை யூலை மூன்றாம் திகதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் இத்தேர்தல் நடைபெற வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி டிசெம்பர் மாதம் நடைபெறும் என்றும் தென் மாகாணசபையில் வெற்றியடைந்தால் அவ் வெற்றி அலையிலே தேர்தல்களை நடத்த முடியும் என ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## டி. பி. விஜேதுங்கா - சிறிமாவோ தென்மாகாணத்தில் சூறாவளிபிரசாரம்

(கொழும்பு)

தென்மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும் அவரது அமைச்சரவைச் சகாக் தென்மாகாண சபையில் பல தேர்தல் கூட்டங்களை ஐக்கிய தேசிய கட்சி தேர்தல் பிரசாரக்குழு ஒழுங்குசெய்துள்ளதாகவும் பல அணிகளாக செய்யப்பட்டுள்ளன. இதே வேளை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் தேர்தல் தொகுதி வாரியாக

## வீரச்சாவு

## இப்படியும் நடந்தது

(மட்டக்களப்பு)

இரு குழந்தைகளை கருவில் சுமந்த தாய் ஒருத்தி ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது ஒரு குழந்தை மட்டும் பெற வைத்த டாக்டர் சத்திர சிகிச்சையை முடித்துக் கொண்டார். இச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்றில் இடம் பெற்றுள்ளது

குருக்கள் மடம் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய் ஒருவர் பிரசவ வேதனை எடுக்கவே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் ஒரு குழந்தையை மட்டும் பெற்று எடுத்த நிலையில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு தையலும் போடப்பட்டது. எனினும் சிறிது நேரத்தில் மீண்டும் வலி எடுக்கவே வைத்தியர் வரவழைக்கப்பட்டு சோதனை நடாத்தப்பட்ட போது மற்றொரு சிசுவும் கருப்பையில் இருப்பது தெரியவந்ததாம். இதனைத் தொடர்ந்து மீண்டும் சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர் மீண்டும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போது ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தாராம்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமனலவேவ அணைக்கட்டு நிதியில் பெரும் ஆயுதக் கொள்வனவு

### லண்டன் சஞ்சிகை கண்டனம்

(லண்டன்)

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு எதிராக சிறிலங்காவின் சமனலவேவ அணைக்கட்டுத் திட்டத்திற்கு கடல் கடந்த பிரித்தானிய அபிவிருத்தி நிர்வாகம் நிதி உதவி வழங்கியதைக் கண்டித்து நியூ சயன்ரிஸ்ட் பெப்ரவரி 26ஆம் திகதிய இதழில் கட்டுரை ஒன்று வெளியிட்டுள்ளது.

துறைசார்ந்த மதிப்பிற்குரிய இந்த இதழ் "இன்னுமொரு அணைக்கட்டு மோசடி" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள கட்டுரையில் இந்த நிதி உதவியில் நடந்ததாகக் கூறப்படும நிதி மோசடியையும் அம்பலப்படுத்தியுள்ளது.

சமனலவேவ அணைக்கட்டுத் திட்டத்திற்கு பிரித்தானியகடல் கடந்த அபிவிருத்தி நிர்வாகம் என்ற அமைப்பும், யப்பானிய அரசும் கூட்டாக நிதிஉதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய பாராளுமன்றத் தெரிவுக்குழு, வெளிநாட்டு அபிவிருத்தி தொடர்பான விசாரணையை விரிவுபடுத்தி சிறிலங்காவுடன் பாகிஸ்தான், இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் நாடுகளுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி தொடர்பாகவும் விசாரணை மேற்கொண்டுள்ளது; இதனை பெப்ரவரி 13 1994 லண்டன் சண்டே ரைம்ஸ் உறுதி செய்துள்ளது. இந்த நிதி உதவியுடன் ஆயுத வியாபாரமும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று லண்டன் சண்டே ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

சமனலவேவ அணைக்கட்டில் ஒழுக்கு ஏற்பட்டபோது (6ஆம் பக்கம் பார்க்க)

## அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டதால் சுவிஸ்ஸில் தீக்குளித்த தமிழர்

டி.பி. விஜேதுங்கவும் அவரது அமைச்சரவைச் சகாக்களும் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் தென்மாகாணத்தில் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

பிரசாரகுழு ஒழுங்குசெய்துள்ளதாகவும் பல அணிகளாக இப் பிரசார கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சகல அமைச்சர்களும் தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்து கொள்ள ஏற்பாடுகள்

விக்கிரமசிங்கா ஆகியோர் தேர்தல் தொகுதி வாரியாக ஒருவாரகாலசூறாவளி பிரசாரத்தைநடத்தி வருவதாகவும் தென்மாகாணசபை வெற்றியே இன்றுமுக்கியமானது என பிரசார கமிட்டி தெரிவித்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை நீதியாக நடாத்த உலகநாடுகள் உதவவேண்டும்

## சிறிமாவோ கோரிக்கை

தென் மாகாண சபைத் தேர்தலை நீதியாகவும், நேர்மையாகவும் நடாத்துமாறு சிறிலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துமாறு எதிர்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க உலக நாடுகளையும் சர்வதேச அமைப்புகளையும் வேண்டியுள்ளார்.

தென் மாகாணசபை தேர்தலில் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் வாக்காளர் பீதியுடன் வாழ்வதாகவும் தெரிவித்தஎதிர்க்கட்சிதலைவி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் இவ்வாறு வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்துள்ளார்.

# அரசு சர்வஜன வாக்கெடுப்பு பற்றி எந்தவித முடிவிற்கும் வரவில்லை

## - பிரதமர் ரணில்

(சென்னை)

வடக்கும் கிழக்கும் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா என்பதைஅறிய கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு எதையும் தற்போது நடாத்துவது குறித்து அரசு எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லை; எத் தீர்மானத்திற்கும் வரவில்லை. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்கு சமாதான நிலையை ஏற்படுத்த அரசசார்பற்றநிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பேச்சுவார்த்தைகளின்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு வருவதானால் அக் குழுவில் பிரபாகரனும் இடம் பெற்றிருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் வேறு மாற்றுவழிகள் எதுவும் தென்படவில்லை. இதனால் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும்பிரதமர் ரணில் இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

# யாழ். வைத்தியசாலை 60 பரல் டீசல் கோருகிறது

யாழ். போதனா வைத்திய சாலை தனது தேவைக்கென இம்முறை அறுபது பரல் டீசல் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சிடம் இருந்து நிதியைக் கோரியிருந்தது.

ஆனால் சுகாதார அமைச்சினால் இருபது பரல் டீசலிற்கு மட்டுமே நிதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

எனவே தேவைப்படும் மிகுதி 40 பரல் டீசலிற்கான நிதியை தாம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருந்தும் மேற்படி மிகுதி நிதியை சுகாதார அமைச்சிடம் இருந்து பெற்றுக் கொள்ள தாம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார். (பா)(தி)

## வீரச்சாவு



வீரவேங்கை விவேகன்

இரணை இலுப்பைக் குளம் பகுதியில் கடந்த 9-ம் திகதி எதிர்பாராதவிபத்தொன்றில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை விவேகன் (பொன்னையா ராசன் - கோவில் குஞ்சுக் குளம் பாலமோட்டை ஓமந்தைவவுனியா) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆதரவாளர் வீரச்சாவு

மடடு மாவட்டத்தில் கடந்த 7-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய துப்பாக்கிப்பிரயோகத்தின் போது விடுதலைப் புலிகள் ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

மகிளவெட்டுவான் சோளையன் குளம் எனுமிடத்தில் நடாத்தப்பட்ட இத் துப்பாக்கிச் சூட்டினால் வீரச்சாவடைந்த சின்னத்தம்பி ரவீந்திரன் (வயது 20, மகிளவெட்டுவான் கல்குடா) என்பவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# சுவீடனில் தீக்குளித்த தமிழர்

(ஸ்ரொக்ஹோம்)

சுவீடனில் அடைக்கலம் கோரியிருந்த இலங்கைத் தமிழர் ஒருவர் தனக்குத் தானே தீமூட்டிக்கொண்டதையடுத்து மிகவும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த திஸ்ஸவீரசிங்கம் (36) பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படவிருந்ததாகவும் அதனை எதிர்த்தே அவர் தீக்குளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுவீடனின் என்ரொப்பிங் எனும் பகுதியில் வசித்துவரும் இவருக்கு சுவீடனில் தங்கி இருப்பதற்கான அனுமதி மார்ச் 14ஆம் திகதியுடன் முடிவடைகிறது எனவும் அதன்பின்னர் இலங்கைக்கு அனுப்பப்படுவதற்காக அவர் காவலில் வைக்கப்படுவார் எனவும் குடிவரவு அமைச்சு அவரிடம் கூறியிருந்தது

இதனையடுத்து மார்ச் 8ஆம் திகதி காலை தற்கொலை செய்யும் முயற்சியாக அவர் தனக்குத்தானே தீமூட்டிக்கொண்டார். நெருப்பில் எரிந்துகொண்டிருந்த நிலையில் வீதியில் காணப்பட்ட இவரை சுவீடன் பிரஜை ஒருவர் காப்பாற்றி உப்சலாவிலுள்ள போதனா வைத்தியசாலை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வலி-வடக்கு பகுதி மீது விமானக் குண்டு வீச்சு

## தொடரான எறிகணை தாக்கு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வலிகாமம் வடக்கு குடியிருப்புகள் மீது இரவு பகலாக பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன.

அச்சுவேலி, பத்தைமேனி, வளலாய், இடைக்காடு ஆகிய இடங்கள்மீது கண்மூடித்தனமான முறையில் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இப்பகுதிகள் மீது நேற்று அதிகாலை 1-30 மணி முதல் 2-15 மணி வரையில் தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமிருந்தன. மேற்குறித்த நேர இடைவெளியில் தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஷெல்கள் பெரும அதிர்வை ஏற்படுத்தின.

அதேவேளை வளாய் பகுதியில் கடும் மோதல் சம்பவம் ஒன்றும் நடைபெற்றதாக அறிய முடிகிறது. வளாயில் வெடிச்சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

நேற்றுக் காலையிலும் அப்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மண்மீட்புப் போரில் மகளை இணைத்த தந்தை

தாயக மண்மீட்புப் போருக்காக தந்தை ஒருவர் தனது மகளை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

வேலணை மேற்கில் இருந்து இடம் பெயர்ந்து நாவாந்துறையில் வசித்து வருபவரான சிவரத்தினம் என்பவரே தனது மகளான சி. கலைச்செல்வி (வயது 21) என்பவரையே விடுதலைப் புலிகளிடம் மண்மீட்புப் போருக்காக ஒப்படைத்தவராவார்.

# கிழக்கில் பிரதேச செயலாளர்கள் அதிகாரங்கள் மீண்டும் அரச அதிபரிடம்

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் கிழக்கு மாகாணத்தில் மீண்டும் அரச அதிபரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் சிவில் நிர்வாகத்தை விரைவில் மேற்கொள்ளும் பொருட்டு இந் நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் பணிப்புரைக்கமைய இது தொடர்பான சுற்று நிருபங்கள் கிழக்கு மாகாணத்திலுள்ள அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உதவி அரச அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்


**பாலர் ஆசிரியர் ஆகலாம்**

ஜி.வி.சு (OIL) சுடைசித் தகைமை விரைவில் பயிற்சி வகுப்பு ஆரம்பம்சனி, ஞாயிறு வகுப்பிற்கு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக்கல்லூரி ஆனைப்பந்தி -யாழ்ப்பாணம். (7737)

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

கைவலன் பிறவுன் ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகா பதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7738)

**காருண்யா சைனீஸ்**

உத்தியோகஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். மதிய உணவு--மீன், இறைச்சி, முட்டை, மரக்கறிப் பாசல்கள் உங்கள் இடங்களுக்கு டெலிவரி (Delivery) செய்யப்படும். விபரங்களுக்கு: KARUNYA CHINESE, 166 1st Cross Street, Jaffna. (பாடசாலை வைபவ ஓடர்கள் சுவீகரிக்கப்படும்). (7718)

**அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**

அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர். அவரது நாடகங்களை பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. பலர் நடிக்கின்றனர். 1. 'கெட்டிக்காரர்கள்'. 2. 'முதலாம்பிள்ளை'. 30/- (7604)


## தென்மாகாண தேர்தல்

# ஐ. தே. க. நிலையில் பலவீனம் டி. பி.க்கு சோதனைக்களம்

### -ராவய ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ஆட்சி ஆளுமையை குறிப்பாக சிங்கள மக்களிடையே அவரது ஆட்சியின் செல்வாக்கை பரிசோதனை செய்யும் ஒரு களமாகவே தென் மாகாண சபைத் தேர்தல் இருக்கப் போகிறது. இன்னும் குறிப்பாக சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கூறிவரும் கருத்துகளுக்கு பெரும்பான்மை மக்கள் எத்தகைய பிரதிபலிப்பைக் காட்ட இருக்கின்றனர் என்பதற்கான ஒரு கணக்கெடுப்பாகவே இத்தேர்தலைக் கொள்ள முடியும் என ராவய இதழின் ஆசிரியரான விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தென் மாகாணமக்கள் கடந்த சுமார் 16 ஆண்டுகளாக தாம் அனுபவித்து வரும் இடர்களுக்கு இத்தேர்தல் மூலம் பதிலளிக்க இருக்கின்றனர் என்பதே உண்மையானது. தற்போது மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு ஐ. தே. க. வினர் பலகலைக் குழுக்களை ஒழுங்கு செய்து கொண்டு செல்லும் போதும், கூட்டத்தில் கலந்து கொள்ளும் மக்கள் தொகை மிகக் குறைவாகவே இருக்கின்றது. அண்மையில் படபொல பகுதியில் ஜனாதிபதி உரையாற்றிய ஒரு கூட்டத்தில் கூட சுமார் 300--400 பேரே கலந்து கொண்டிருக்கின்றனர்.

ஆட்சி மாற்றமொன்றை மக்கள் விரும்புகின்றனர் என்பதையே இது காட்டுகின்றது. அதற்கான ஒரு சமிக்ஞையாகவே இதனைக் கொள்ள வேண்டும். இந்த மாற்றத்தை பெருமளவில் விரும்புபவர்கள் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் ஆவர். சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஐ. தே. கவின் வாக்குப் பெறும்நிலைமிகவும் பலவீனமாகவே காணப்படுகிறது.

இதனை முறியடிக்க தோட்ட துரைமார்களின் மாளிகைகள் தற்போது குண்டர்களின் இருப்பிடமாக மாறி வருகின்றமை தென் மாகாணத்தில் தெரிகிறது. எனினும் இதனை நிறுத்துமாறு மக்கள் அவ்விடங்களை சூழ்ந்து இவர்களை வெளியேற்றிய சம்பவங்களும் கூட நடைபெற்றுள்ளது. அதாவது மக்கள் குண்டர்களை எதிர்த்து துணிவுடன் இருக்கும் நிலைகள் காண முடிகிறது எனவும் தெரிவித்தார்.

## இன்றைய நிகழ்வுகள்

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

* *

சிறி ராமகிருஷ்ண பரமஹம்சரின் 159 ஆவது ஜெயந்தி விழா இன்று திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது. அதிகாலையில் ஆரத்தியுடன் ஆரம்பமாகி விசேட பூஜை, ஆராதனை, பஜனை, இடம்பெற இருப்பதுடன் மாலையில் கலை நிகழ்ச்சிகளும், சிறப்பு சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது.

* *

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பி. ப. 1-30 மணியளவில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா, சிறப்பு விருந்தினராக சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு. மதி, சங்கானைக் கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழக இணைப்பாளர் திரு. இ. சச்சிதானந்தம், பழைய மாணவர் திரு. இ. கோணேஸ்வரன், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. மு. முருகன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

* *

## வேட்பாளர் வாகனங்கள்மீது இனம்தெரியாதோர் சூடு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவேட்பாளர் ஒருவரின் இரு வாகனங்கள் மீது இனம் தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் எனத் திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தென்மாகாணசபை வேட்பாளரான மகிந்த யாப்பாவின் வாகனங்கள் திக்கொட பகுதியில் வைத்து இரவு பதினொரு மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகவும், அவ்வாகனங்களின் சாரதிகள் காயமடைந்தனர் எனவும், எனினும் வேட்பாளர் அவ் வாகனங்களில் பயணம் செய்யவில்லை எனவும் அப் பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

## மானிப்பாய் பகுதியில் வீடுடைத்து கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பட்டப் பகலில் வீட்டை உடைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை மானிப்பாய் பகுதியில் பிரதான வீதியை அண்டிய இடத்தில் உள்ள வீடொன்றை உடைத்து உட்புகுந்த கொள்ளையர் நகைகளையும் பணத்தையும் வேறும் சில பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

துரைரெங்னம் அகினேஸ் என்பவரது வீட்டிலேயே இத் துணிகரத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

வீட்டுக்காரர் வீட்டைப் பூட்டிவிட்டு ஆலய வழிபாட்டுக்குச் சென்ற சமயம் இக் கொள்ளை இடம் பெற்றது. நேற்றுக்காலை 6-00 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது, கதவுகள் உடைக்கப்பட்டு மேற்படி பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (தி)

## வேலி எரிப்பு வழக்கில் 21 பேர் குற்றவாளிகள்

(வடமராட்சி)

தனியொருவரின் வேலியை கூட்டமாகக் கூடி எரித்து பொது சமாதானத்திற்கு பங்கம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை காவல்துறையினரால் பருத்தித்துறை கண்ணகை அம்மன் கோவிலைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றம் முன் ஆஜர்செய்யப்பட்டனர்.

வேலி எரிப்பு விடயத்தில் கலந்துகொண்ட 21 பேர் நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டனர். நீதிவான் தலா 500 ரூபா நஷ்ட ஈடாகவும், தலா 500 ரூபா அபராதமும் விதித்துள்ளார். (போ)

## வறிய மக்களுக்கு வீடமைக்க முயற்சி

(வடமராட்சி)

வடமராட்சியில் உள்ள மூன்று பிரதேச செயலகங்களில் வறுமையிலும், வறுமையில் வாழும் வீடில்லாத குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகிறது.

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகங்களில் உள்ள 75 கிராம அலுவலர் பிரிவுகளில் வீடமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமராட்சி வடக்குப் பிரிவில் 80 வீடுகளும், வடமராட்சி கிழக்கில் 15 வீடுகளும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரிவில் 25 வீடுகளும், அமைக்கப்படும் என கரவெட்டி உபவேலை பரிசோதகர் திரு. சோ. கணநாதன் தெரிவித்தார்.

மற்றும் 1990 ஆம் ஆண்டுக்கு முன் வீடமைப்பு வேலைகள் முடிவடைந்தவர்களுக்கு மிகுதிக் கொடுப்பனவுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்டு வருகிறது. (போ)

## நினைவு கூருகின்றோம்...

**1994-03.14**

1985-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - கந்தளாய் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட,

✵ **கிட்ணன்** (சின்னத்தம்பி இருகிணபிள்ளை-கதிரோளி, வாகரை-மட்டு)

மன்னார்-முருங்கன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

✵ **பாண்டியன்** (செபமாலை நிக்கலஸ் - வட்டக்கண்டல்-மன்னார்)

1986-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

✵ **பரமேஸ்** (-பரமேஸ்வரன்-கள்ளிச்சை வடமுனை-மட்டு)

கிளி-பரந்தன்-முல்லைத்தீவு வீதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பரந்தன், 3-ம் வாய்க்காலைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1988-ம் ஆண்டு முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, களிக்காட்டுப்பகுதியில் எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் வாதவூரன்** (தம்பையா யோகேஸ்வரன் -அம்பாள்குளம்-கிளிநொச்சி)

யாழ்-சுழிபுரம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தன்னைத் தானே சுட்டு வீரச்சாவெய்திய,

**லெப்-குலஸ்-முரளி** (மயில்வாகனம் முரளிகிருஷ்ணன்-நெல்லியான்வீதி, சுழிபுரம் மேற்கு-யாழ்)

இதே சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அம்மான்-நேசன்** (வினாசித்தம்பி சிவகுமார்-சுழிபுரம்-யாழ்)


## தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு அச்சுக் கோர்ப்பாளர்களும், பக்கம் கட்டுநர்களும், பத்திரிகைத் தாள்கள் வெட்டுவது மற்றும் மடிப்பது போன்ற பணிகளை ஆற்றக் கூடியவர்களும் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் இன்று திங்கட்கிழமை காலை பத்து மணியளவில் அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(அனுபவம் உள்ளவர்கள் மாத்திரம் வரவும்)

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் ஈழநாதம்


## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்

காலஞ்சென்ற கதிர்காமு இராசலிங்கம் இராசலிங்கம் சின்னத்தங்கம் அவர்களின் புதல்வி திருநிறை செல்வி

"ஜெயநந்தா"

அவர்களுக்கு எதிர்வரும் (16-03-1994) ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 3 ஆம் நாள் காலை 10 மணி

(அனுபவம் உள்ளவர்கள் மாத்திரம் வரவும்)

31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.                    ஈழநாதம்

(இ)

---

We Serve

### பிராந்தியம் 6 லயன்ஸ்-
## புற்றுநோய் நிதியம்
### Region 6 Lions - Cancer Fund

15-03-94-ல் நடைபெற இருந்த புற்றுநோய் நிதிய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 20-03-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நாவலர் மண்டபம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

(7739)                    பிராந்தியத் தலைவர்

---

## பொதுக் கூட்டமும்
### புதிய நிர்வாகசபைத் தெரிவும்

சகல தொழிலாளர்களுக்கும் 16-03-94 இல் நடைபெறவிருந்த மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது இக் கூட்டம் எதிர்வரும் 16-04-94 சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு சங்கமண்டபத்தில் நடைபெறும் என்பதைச் சகல சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் அறியத்தருகிறேன்

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்

71, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.                    (இ-8832)

---

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான 'கணித விஞ்ஞான பொது அறிவுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை நடைபெறும், இதில் வேலணைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி யாழ். அராலி வீதியில் இயங்கும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்திலும், ஊர்காவற்றுறைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் அக்கடமியிலும் நடைபெறும் என அறிய வருகின்றது. (22)

ஃ ஃ

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தின் நடமாடும் சேவை நிகழ்வு இன்று யாழ் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ வேதநாயகம் தலைமையில் இடம் பெறும்: இந்நிகழ்வு காலை 8 30 மணிமுதல் பிற்பகல் 4, 30மணிவரை நடைபெறும் (24)

ஃ ஃ

(வடமராட்சி)

பருத்தித்துறை பெண்கள் உயர்தரக் கல்லூரியின் உடற்பயிற்சிப் போட்டி ஒன்று இன்று உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. ராசேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சிப் போட்டியில் பிரதம விருந்தினராக வலயம் II பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கலந்து கொள்வார். (யோ)

---

அவர்களுக்கு எதிர்வரும் (16-03-1994) ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 3 ஆம் நாள் காலை 10 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் நீராட்டு விழாவில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

அழைப்பு,

மைத்துனர் சி. துரைரத்தினம் (எம். ஜீ. ஆர்.)
பாரியாரும்
சகோதரர்களும்

உடுத்துறை - வடக்கு
தாளையடி.

(7710)

---

## 4-ம் ஆண்டு நினைவு நாள்



தாயக மடியில்:
19-01-1971

தாயக மண்ணில்:
14-03-1989

### வீரவேங்கை பிரதாப்
### தங்கராசா பிரேமதாஸ்

தன்மான தமிழினத்தின் மானம் காக்கப்
புறப்பட்ட பிரதாப்!
அந்நியரின் கையில் அகப்படாமல்
இயக்க மரபு காத்த பிரதாப்
உமது 4-ம் ஆண்டு நினைவு நாளில்
எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கை
ஆக்குகின்றோம்.

பிரதாப் வீதி,
கோண்டாவில்.

தங்கராசா குடும்பத்தினர்
(7740)

---

இதே சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அம்மான்-நேசன்** (சின்னத்தம்பி சிவகுமார்-சுழிபுரம்-யாழ்)

1989-ம் ஆண்டு கோண்டாவில், குமரக்கோட்டம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

கோண்டாவில் பிரதேசப் பொறுப்பாளர்,

**2-ம் லெப்.மோகன்** (தர்மலிங்கம் சாந்தன் - கோண்டாவில் மேற்கு-யாழ்)

**லெப்.சாள்ஸ்** (ஞானசேகரம் ஞானசொரூபன்-நெல்லியடிப்பாய், கோண்டாவில்-யாழ்)

**பிரதாப்-குட்டி** (தங்கராசா பிரேமானந்தன்- கோண்டாவில் வடக்கு-யாழ்)

யாழ்-புங்கங்குளம் சந்தியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**நவநீதன்** (நவரத்தினம் நவநீதன் - புங்கங்குளம், அரியாலை-யாழ்)

காரைநகரில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**முஸ்தபா** (செபமாலை செபஸ்தியாம்பிள்ளை- நெடுந்தீவு-யாழ்)

இதேபகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பரமேஸ்** (கந்தசாமி பரமேஸ்வரன்-நெடுந்தீவு-யாழ்)

பளைச்சந்தியில் பேருந்தில் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991-ம் ஆண்டு மண்டு - புலிபாய்ந்தகல்லில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**விமல்** (த. பிரபாகரன் - பொத்துவில்-அம்பாறை)

முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.மணி** (கந்தையா சேனாதிராசா-சந்திவெளி-மட்டு)

1993-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

**மேஜர் சேகர்** (சுப்பிரமணியம் சூபச்சந்திரன்-கற்சிலைமடு, ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

### ஆகியோரை இந்நாளில்
### நினைவு கூருகின்றோம்.

✱ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8830)

# விஞ்ஞானம்

# மாணவர் அரங்கு

## பகுதி A
## இரசாயன சேர்வைகள்

1. நைத்திரேற்றுக்கள்
   1) சோடியம் நைத்திரேற்றும் பொட்டாசியம் நைத்திரேற்றும் வெப்பத்தால் பிரிகையடைந்து அவற்றின் நைத்திரைட்டையும் ஒட்சிசனையும் கொடுக்கும்.

$$2KNO_3 \xrightarrow{\Delta} 2KNO_2 + O_2$$

$$2NaNO_3 \xrightarrow{\Delta} 2NaNO_2 + O_2$$

இங்கு $NaNO_2$உம் $KNO_2$உம் திண்மங்கள் ஆகையால் தூய ஒட்சிசன் கிடைக்கும்

2. ஏனைய நைத்திரேற்றுக்கள் அவற்றின் ஒக்சைட்டையும் நைதரசனீர் ஒக்சைட்டையும், ஒட்சிசனையும் கொடுக்கும்.

$$2Zn(NO_3)_2 \xrightarrow{\Delta} 2ZnO + 4NO_2 + O_2$$

$$2Mg(NO_3)_2 \xrightarrow{\Delta} 2MgO + 4NO_2 + O_2$$

இங்கு $O_2$வுடன் கபில்நிற $NO_2$ வாயுவும் சேர்ந்து வருவதனால் ஒட்சிசன் தூயதாக இருக்க மாட்டாது.

3. வெள்ளி நைத்திரேற்றும், இரசநைத்திரேற்றும் பிரிகை அடைந்து அவற்றின் உலோகத்தையும் நைதரசன் பர ஒக்சைட்டையும் ஒட்சிசனையும் கொடுக்கும்:

$$2AgNO_3 = 2Ag + N_2O_4 + O_2$$

$$Hg(NO_3)_2 = Hg + N_2O_4 + O_2$$

4. எல்லா நைத்திரேற்றுக்களும் நீரில் கரையும்

### பிற உப்புக்களின் கரைதிறன்

அ) ஈயம், இரசம், வெள்ளி ஆகிய உலோகங்களின் குளோரைட்டுக்கள் நீரில் கரையாது. ஏனைய குளோரைட்டுக்கள் நீரில் கரையும்.

ஆ) பேரியம், ஈயம், இரசம், துரந்தியம் ஆகியவற்றின் சல்பேற்றுக்கள் நீரில் கரையாது. ஏனைய சல்பேற்றுக்கள் நீரில் கரையும்.

இ) சோடியம், பொட்டாசியம், அமோனியம் ஐதரொக்சைட்டுக்கள் நீரில் கரையும். ஏனைய ஐதரொக்சைட்டுக்கள் நீரில் கரையாது.

ஈ) எல்லா அசற்றேற்றுக்களும் நீரில் கரையும்.

குறிப்பு: நீரில் கரையாதவையே வீழ்படிவாகும். எனவே வீழ்படிவை கண்டறிய நீரில் கரையாத உப்புக்களை தெரிந்து வைத்திருத்தல் இலகுவானதாகும்.

## பகுதி B

### தாவரத் தொழிற்பாடுகள்

01. ஆவியீர்ப்பும் நீர் உறிஞ்சலும்

அ) இலைக்கலங்களில் உள்ள நீர் வாயு நிலையில் இலைவாயூடாக இழக்கப்படுதல் ஆவியீர்ப்பு ஆகும்.

ஆவியீர்ப்பால் தாவரங்கள் பின்வரும் நன்மைகளைப் பெறுகின்றன.

1) நீர் உறிஞ்சல் விசையை பெறல்
2) மேலதிக நீரை இழந்து நீர்ச்சமநிலையைப் பேணல்.
3) கலங்களை குளிர்ச்சியாக வைத்திருத்தல்

வறள் நில தாவரங்கள் ஆவியீர்ப்பைக் கட்டுப்படுத்த பின்வரும் இசைபாக்கங்களைக் கொண்டுள்ளன.

1) தடித்த புறத்தோல் காணப்படல் (அலரி)
2) இலைகள் முட்களாகத் திரிபடைதல் (நாகதாளி)
3) செதில் இலை காணப்படல் (சவுக்கு)
4) பால் காணப்படல் (கள்ளி)
5) வெண்பூச்சு காணப்படல் (எருக்கலை)
6) பிசினை கொண்டிருத்தல் (மொசு மொசுக்கை)
7) சளியத்தைக் கொண்டிருத்தல் (கற்றாளை)
8) துளிர் இலைகள் பளபளப்பாக காணப்படல் (மா, வேம்பு)

குறிப்பு: 1) இலைவாய் கூடிய பரப்பாலேயே கூடியளவு நீர் இழக்கப்படும்

ஆ) தாமரை, அல்லி, போன்ற நீரில் மிதக்கும் இலைகளில் மேற்பரப்பில் இலைவாய்களின் எண்ணிக்கை கூட

இ) ஒருவித்திலைத் தாவரங்களில் இருபரப்புக்களிலும் இலைவாய்கள் சமன்

ஆவியீர்ப்பைப் பாதிக்கும் காரணிகள்

1) வளியின் ஈரப்பதன் 2) வெப்பநிலை
3) காற்றின் வேகம் 4) மண்ணீரின் அளவு

1. ஈரப்பதன் கூட ஆவியீர்ப்பு வீதம் குறையும்
2. வெப்பநிலை கூட ஆவியீர்ப்பு வீதம் கூடும்
3. காற்றின் வேகம் கூட ஆவியீர்ப்பு வீதம் கூடும்
4. மண்ணீர் அளவு குறைய ஆவியீர்ப்பு வீதம் குறையும்

### நீர் உறிஞ்சல்

1. வேரிலுள்ள வேர் மயிரினால் பிரசாரண முறையால் நீர் உறிஞ்சப்படுகிறது.
2. உறிஞ்சப்பட்ட நீர் இறந்த காழ்க்குழாய்களினூடாக கடத்தப்படும் உயிருள்ள காழ்க்குழாயினுள் குறுக்குச்சுவர் காணப்படுவதனால் அதனூடாக நீரைக் கடத்தமுடியாது.
3. உயர்ந்த தாவரங்களில் நீரைக் கடத்த தேவையான காரணிகள்
   1) பிரசாரணம்
   2) காழ்க்குழாயின் மயிர்த்துளைத் தன்மை
   3) வேரமுக்கம்
   4) பிணைவு விசை (தொடர்ச்சியான நீர் நிரல்)
   5) ஆவியீர்ப்பால் ஏற்படும் உறிஞ்சல் விசை
4. வேரின் தொழில்கள்

அ) எல்லா தாவர வேர்களிலும் நடைபெறும் பிரதான தொழில்கள்
   1) தாவரத்தை உறுதியாக வைத்திருத்தல்
   2) நீர் உறிஞ்சல்

ஆ) சில தாவரங்களில் மட்டும் நடைபெறும் விசேட தொழில்கள்
   1) உணவு சேமிப்பு (மரவள்ளி, வற்றாளை)
   2) இனப் பெருக்கம் (கறிவேப்பிலை, ஈரப்பலா)
   3) சுவாசம் (கண்டல் | சதுப்புநிலதாவரம்)

## பகுதி C

### அடர்த்தியும் அமுக்கமும்

01. அடர்த்தி என்றால் என்ன?
ஒரு கனவலகு கனவளவுடைய பதார்த்தத்தின் திணிவு அடர்த்தியாகும்.

02. X என்னும் பதார்த்தத்தின் அடர்த்தி $5kg/m^3$ என்பதில் இருந்து யாது விளங்குகின்றீர்?
X இன் ஒரு மீற்றர் கனத்தில் 5kg திணிவு காணப்படும்.

03. மேற்கூறப்பட்ட பதார்த்தத்தின் $4m^3$த்தில் உள்ள திணிவு யாது?
முறை 1 1 மீற்றர் கனத்திலுள்ளது = 5 kg
∴ 4 மீற்றர் கனத்திலுள்ளது $= 4 \times 5 = 20$ kg.

முறை 11 $D = \frac{m}{v}$

$$5 = \frac{m}{4}$$

$$m = 4 \times 5 = 20 \text{ kg}$$

04. 60kg திணிவும் $5m^3$ கனவளவும் உடைய திண்மத்தின் அடர்த்தி யாது?
முறை 1 $5m^3$த்தின் திணிவு = 60 kg
∴ $1m^3$த்தின் திணிவு $= \frac{60}{5} = 12$
∴ அடர்த்தி $= 12kg/m^3$

முறை 11 $D = \frac{m}{v}$

$$D = \frac{60 \text{ kg}}{5 \text{ m}^3}$$

குறிப்பு:- விடயத்தை விளங்குவதற்காக முறை 1 உம் பரீட்சையில் விரைவாக செய்வதற்கு முறை 11ம் பயன்படுத்துக

05. அடர்த்தியை பாதிக்கும் காரணிகள் எவை என்றும் அவை எவ்வாறு அடர்த்தியை பாதிக்கும் எனவும் கூறுக?
பாதிக்கும் காரணிகள் ஆவன
(1) வெப்பம்
(2) அமுக்கம்

∴ 1. வெப்பம் சடப்பொருளின் எல்லா நிலையிலும் அடர்த்தியை பாதிக்கும்.
2. வெப்பங்கூட சடப் பொருட்கள் விரிவடைவதால் கனவளவுகூட அடர்த்தி குறையும்.
3. அமுக்கம்:- வாயுக்களின் அடர்த்தியை மட்டும் பாதிக்கும் அமுக்கம்கூட வாயுக்களின் அடர்த்தி கூடும்.
∴ அமுக்கத்தால் திண்ம, திரவங்களில் அடர்த்தியில் மாற்றம் ஏற்படுவதில்லை.

06. சாரடர்த்தி:- ஒரு பொருளின் திணிவிற்கும் அதேகனவளவுள்ள தூய நீரின் திணிவிற்கும் உள்ள விகிதம் சாரடர்த்தி ஆகும்.

07. சாரடர்த்தியின் தொடர்புகள்

(a) சா. அடர்த்தி $= \frac{\text{பொருளின் திணிவு}}{\text{அதேகனவளவுள்ள தூய நீரின் திணிவு}}$

(b) சா. அடர்த்தி $= \frac{\text{பொருளின் அடர்த்தி}}{\text{நீரின் அடர்த்தி}}$

(c) சா. அடர்த்தி $= \frac{\text{V கன அலகு பொ. திணிவு}}{\text{V கன அலகு நீரின் திணிவு}}$

அலகுகள் அற்ற கணியங்கள்
(I) சாரடர்த்தி (II) பொ. முறைநயம் (III) வேக விகிதம்
(IV) சாரணுத்திணிவு (t)

### திரவ அமுக்கம்

01) திரவ அமுக்கத்தின் இயல்புகள்
திரவம் ஓய்விலுள்ள போது
(a) அதன் மேல் மட்டத்தில் திரவ அமுக்கம் பூச்சியம்.
(b) ஆழம் கூடக்கூட திரவ அமுக்கம் கூடும்
(c) ஒரே கிடைத்தளத்தில் எல்லாப் புள்ளிகளிலும் அமுக்கம் சமன்
(d) திரவத்தினுள் ஒரு புள்ளியை சுற்றி எல்லாத் திசைகளிலும் அமுக்கம் சமன்.

02) திரவ அமுக்கத்தால் இயங்கும் கருவிகள்
1. நீரியல் நிறுத்தி 2. நீரியல் பாக்கு
திரவ அமுக்கத்தின் தொடர்பு:
திரவ அமுக்கம் = ஆழம் × அடர்த்தி × ஈர்வையிலான ஆர்முடுகல்

$$P = hdg$$

விளக்கங்கள்:- p- அமுக்கம் h- ஆழம் d- அடர்த்தி g- ஈர்வையிலான ஆர்முடுகல்

(1) அணைக்கட்டின் அடி ஏன் அகலமாக கட்டப்படவேண்டும்.
1) நீரில் ஆழம் கூடக்கூட அமுக்கம் கூடும்,
எனவே அணையின் அடியில் அமுக்கம் கூடவாகும்.
எனவே அடி அகலமாக கட்டப்பட வேண்டும்.
2) நீரின் அடியில் இருந்து மேலெழும் வழிக்குமிழ்கள் பெரிதாகல்.
திரவத்தில் ஆழம் கூட அமுக்கம் கூடும் எனவே அடியில் அமுக்கம் கூடவாகும் அமுக்கம் கூட வாயுவின் கனவளவு குறையும் இதனால் அடியில் உள்ள போது சிறிதாக உள்ளது. மேலே வர அமுக்கம் குறையும் கனவளவு கூடும் எனவே பெரிதாக தோன்றுகின்றது.

கறியுப்பு (இந்துப்பு) என்பதே சரியானதாகும்.
(ஆதாரம் அடிப்படை இரசாயனவியல் அதிகாரம் - 26)
ஆண்டு 9 விஞ்ஞானப்பாடப் புத்தகத்தில் $MgSO_4$ இந்துப்பு எனவும்.
,, 10 ,, ,, $Na_2SO_4$ இந்துப்பு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை தவறானது ஆகும்.

குறிப்பு: 1) இலைவாய் கூடிய பரப்பாலேயே கூடியளவு நீர் இழக்கப்படும்
அ) தரைவாழ் இருவித்திலைத் தாவரங்களில் இலையின் கீழ்ப்பரப்பில் இலைவாய் கூட

$$D = \frac{60\ kg}{5\ m^3}$$

$$D = 12\ kg/m^3$$

- அருள்நேசன்

# பொருளியல்

## சென்மதி நிலுவைப் பிரச்சினை
## PROBLEM OF BALANCE OF PAYMENT

சென்மதி நிலுவைப் பிரச்சினை பற்றி இக்கட்டுரையானது பின்வரும் ஐந்து பகுதிகளாக ஆராயப்படுகிறது.

i) சென்மதி நிலுவை
ii) சென்மதி நிலுவைப் பிரச்சினை
iii) தோற்றுவிக்கும் காரணிகள்
iv) பொருளாதாரப் பாதிப்புகள்
v) தீர்வுக்கான வழிமுறைகள்

## I

### சென்மதி நிலுவை

இன்று எந்த ஒரு நாடும் தனித்து தனது தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்ய முடியாது; எனவே ஒவ்வொரு நாடும் ஏனைய உலக நாடுகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல் அவசியமாகிறது. இவ்வகையில் ஒரு நாட்டிற்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் பொருட்கள், சேவைகள், நன்கொடைகள், முதலீடுகள், கடன்கள் என பல வடிவங்களில் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுகின்றன; இவ்வாறாக "குறிப்பிட்ட காலத்தில் பொதுவாக ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டிற்கும் உலகின் ஏனைய நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற சட்டபூர்வமான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் வரவு (Credit), பற்று (Debit), தேறியது (Net), என கணக்கியல் கோட்பாட்டிற்கு அமைய ஒழுங்கான முறையில் பதிந்து காட்டப்படும் ஓர் அட்டவணையே சென்மதி நிலுவையாகும்" வருமானங்கள் வரவுப் பக்கத்திலும், கொடுப்பனவுகள் பற்று பக்கத்திலும் பதியப்படும்.

சென்மதி நிலுவைக்கணக்கு பின்வரும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது;

1. நடைமுறைக்கணக்கு (Current Account)
2. மூலதனக்கணக்கு (Capital Account)

### 1) நடைமுறைக் கணக்கு

பொருட்கள், சேவைகள், மாற்றல்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியதாக இக்கணக்கு அமைகிறது; இது இரு பகுதிகளைக்கொண்டுள்ளது;

i) பொருட்கள் பணிகள் கணக்கு (Goods and Services Account)
ii) மாற்றல்கள் கணக்கு (Transfers Account)

### i) பொருட்கள் பணிகள் கணக்கு

இது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

அ) வணிகப் பொருள் கணக்கு

இதில் பொருள் ஏற்றுமதிகளும், இறக்குமதிகளும் பதியப்படுகின்றன. பொருள் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான வித்தியாசம் "வர்த்தக நிலுவை" (Balance Of Trade) எனப்படுகிறது இந்த நிலுவை மிகையாகவோ (Surplus), பற்றாக்குறையாகவோ (Deficit) இருக்க முடியும் பல நாடுகளில் இது சென்மதிநிலுவையின் பலம் அல்லது பலவீனத்தை நிர்ணயிக்கும் அடிப்படைக் குறிகாட்டியாக இருந்து வருகிறது.

(ஆ) பணிகள் கணக்கு

இதில்
- துறைமுகம், போக்குவரத்து காப்புறுதி
- முதலீட்டு வருவாய்கள் (இலாபங்கள், வட்டி)
- அரச பணிகள்
- ஏனைய பணிகள்

போன்றன பதியப்படுகின்றன. பணிகளின் மொத்த பெறுவனவுக்கும் கொடுப்பனவுக்கும் இடையான தொகை "பணிகள் நிலுவை" எனப்படும்.

முக்கியமான சுற்றுலா மையங்களைக் கொண்ட நாடுகள், இராணுவத் தளங்களைக் கொண்ட, பாரிய அளவில் வெளிநாட்டில் முதலீடுகளைக் கொண்ட நாடுகள் போன்ற பணித்துறையில் அதிகளவில் ஈடுபாடு கொண்ட நாடுகளைப் பொறுத்த வரையில் சென்மதி நிலுவையின் பணிகள் பிரிவு முக்கியத்துவம் பெறுகிறது. இத்தகைய நாடுகளில் மோசமான வர்த்தக நிலுவைகள் பல சந்தர்ப்பங்களில் முற்றிலும் அல்லது ஒரு பகுதி பணிகளின் சாதகமான நிலுவைகளினால் ஈடு செய்யப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட இரு கணக்கின் மீதிகளான வர்த்தக நிலுவை; பணிகள் நிலுவை இரண்டையும் கூட்டுவதன் மூலம்பெறப்படுவது "பொருட்கள் பணிகள் நிலுவை" எனப்படுகிறது.

### (ii) மாற்றல்கள் கணக்கு

"பொருட்கள், சேவைகள் எதனையும் வழங்காமல் ஒரு நாடு வெளிநாடுகள், நிறுவனங்களிடமிருந்து பெறுகின்ற வருமானங்கள் அதே போல் பொருட்கள், சேவைகள் எதனையும் பெற்றுக் கொள்ளாமல் ஒரு நாடு வெளிநாடுகள், நிறுவனங்களுக்கு செலுத்தும் கொடுப்பனவுகள் என்பனவே மாற்றல்கள் எனப்படுகின்றது" இவை "ஒருபக்கக் கொடுப்பனவுகள் ஆகும். மாற்றல்கள் இருவகையானவை;

(அ) தனியார் மாற்றல்கள் (Private Transfers)
(ஆ) அலுவல் சார் மாற்றல்கள் (Official-Transfers)

தனியார் மாற்றல்கள் என்பது வெளிநாடுகளிலுள்ள தனிநபர்களினால் குறிப்பிட்ட நாட்டில் உள்ளவருக்கு கொடையாக அனுப்பப்படும் தொகைகளைக் குறிக்கிறது. இத் தனியார் மாற்றல்களில் ஒரு முக்கிய கூறாக வெளிநாட்டில் தொழில் புரிவோர் அனுப்பும்பணம் விளங்குகிறது

அலுவல் சார் மாற்றல்கள் என்பது வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றால் ஒருநாட்டு அரசாங்கத்திற்கு வழங்கப்படும் நன்கொடைகளைக் குறிக்கிறது.

பொருட்கள், பணிகள் மற்றும் மாற்றல்கள் என்பவற்றில் காணப்படும் மொத்த நிலுவை "நடைமுறைக் கணக்கு நிலுவை" எனப்படும்; ஒரு நாட்டின் சென்மதி நிலுவையை நிர்ணயிக்கும் அதி முக்கிய காரணியாக நடைமுறைக் கணக்கு நிலுவை கருதப்படுகிறது; (குறிப்பு: அலுவல்சார் மாற்றல்கள்பல சந்தர்ப்பங்களில் மூலதனப் பாய்ச்சலை பிரதிநிதித்துவப் படுத்தும் காரணத்தினால் சில வேளைகளில் அது நடைமுறைக் கணக்கு நிலுவைகளிலிருந்து விலக்கப்படுகிறது இந்த மாற்றல்களை மூலதனக் கணக்கில் பதிவதனால் ஏற்படும் பிரச்சினை மெய் மூலவளங்களின் ஒரு கொடைஅதனைப் பெறுகின்ற நாட்டின் சென்மதி நிலுவையை மோசமாக்கக் கூடியது என்பதாகும்) நடைமுறைக் கணக்கு நிலுவை பொருளாதாரம் ஒன்றின் வெளியுலகுடனான மெய்க் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாகக் கிடைக்கும் நிதிச் சொத்துக்களின் தேறிய மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது.

### 2. மூலதனக் கணக்கு

"வெளிநாட்டுமுதலீடுகள், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டுச் சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கிய கணக்கே மூலதனக்கணக்காகும்" இது இரு பிரிவுகளைக்கொண்டிருக்கிறது.

(அ) நாணயமல்லாத் துறை Non-Monetary Sector:-

எவ்வித கட்டாயப்படுத்தலும் இன்றி தாமாகவே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களான தனியார் முதலீடு (நேரடி முதலீடு, பட்டியல் இடப்பட்ட முதலீடு-Portfolio Investment), அரச, தனியார் துறையின் கடன்கள் (நீண்டகால, குறுங்கால) ஆகிய மூலதன வகைகளை நாணயம் சாராத துறை உள்ளடக்குகிறது.

(ஆ) நாணயத்துறை (Monetary Sector)

சென்மதி நிலுவைக் கணக்கை சமப்படுத்தப் பயன்படுத்தப்படும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய கணக்கே நாணயத்துறை ஆகும்.

- அரசு மத்தியவங்கி, வர்த்தக வங்கிகள் என்பவற்றின் தேறிய வெளிநாட்டு சொத்து நிலமை (சொத்து - பொறுப்பு)
- சர்வதேசநாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்கள்
- சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு (Allocation of SDRs)
- பெறுமதி சீராக்கங்கள் (Valuation Adjustments)
- பிழைகளும் தவிர்ப்புகளும்.

போன்ற விடயங்கள் இதில் சேர்க்கப்படுகின்றன.

நடைமுறைக் கணக்கு நிலுவையுடன் நாணயமல்லாத மூலதனம், பெறுமதிச் சீராக்கங்கள், சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீடுகள், பிழைகளும் தவிர்ப்புகளும் என்பவற்றைக் கூட்டுவதன் மூலம் பெறப்படுவது "மொத்த (திரண்ட/சமூல) நிலுவை" (Overall Balance) எனப்படும். திரண்ட நிலுவையின் பற்றாக்குறை நாணய அசைவுகள் மூலம் சமப்படுத்தப்படும். அதாவது வெளிநாட்டு சொத்துக்களைப் பயன்படுத்துவதன் மூலமோ, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதன் மூலமோ திரண்ட நிலுவையின் பற்றாக்குறை நீக்கப்படும்.

1992ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சென்மதி நிலுவை பற்றிய தரவுகள் 4ஆம் பக்கம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது;

ஒரு நாட்டின் வர்த்தகப் போக்கை அறியவும் அதற்கேற்ப நடைமுறைக் கொள்கைகளை வகுத்துக் கொள்வதற்கும் சென்மதி நிலுவைக் கணக்குக் கணிப்பீடு உதவுகிறது.

வே. கருணாகரன் (B A Hons, Dip in Ed)
ஆசிரியர், யா-கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

## II

### சென்மதி நிலுவைப் பிரச்சினை

ஒரு வருட காலப் பகுதியில் ஒரு நாட்டின் வெளிநாட்டு பெறுவனவின் அளவும், கொடுப்பனவின் அளவும் சமனாக இருப்பின் சென்மதி நிலுவை சமநிலையில் இருக்கும். அவ்வாறில்லாவிடின் சென்மதி நிலுவையில் சமநிலையின்மை நிலவும். வெளிநாட்டுப் பெறுவனவின் அளவு கொடுப்பனவின் அளவிலும் கூடுதலாக இருப்பின் அது 'சென்மதி நிலுவை மிகை' (சாதகமான நிலுவை) எனப்படும்: இது சென்மதி நிலுவையின் சமநிலையின்மையைக் குறிப்பி

(4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு கிழக்கு யுத்தமுனை செல்லும்

# சிங்கள இளைஞர் திரும்புவது பொலிதீன் பைகளிலேயே

-திருமதி சந்திரிகா குமாரணதுங்க

(கொழும்பு)
தென்பகுதி இளைஞர்களை வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி அங்கிருந்து அவர்களை பொலிதீன் பைகளில் எடுத்து வருகிறது இந்த அரசாங்கம் எனத் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

தென்மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் பலப்பிட்டிய பகுதியில் இடம் பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த ஐ. தே. க. ஆட்சி நீடிக்கும் வரை வடக்குகிழக்கு பிரச்சினை என்றும் தீர்க்கப் படமாட்டாது. பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்தும் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. அத்துடன் விடுதலைப் புலிகளும், தலைவர் பிரபாகரனும் வடக்கு கிழக்கில் ஆட்சி அமைக்க இந்த அரசாங்கமே வழிவகைகளை செய்து வருகின்றது. இதனால் நாளை வடக்கும், கிழக்கும் மிகவும் ஒரு கேள்விக்குறியாக அமையும் எனவும் தெரிவித்தார். பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் தொடர்ந்து ஆட்சி அதிகாரங்களை மட்டும் கைப்பற்ற அரசாங்கம் முற்படுகின்றதே தவிர தமது ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு என்ன செய்யப்பட்டது என்பதைக்கூட வெளிப்படுத்த தயங்கும் நிலையே காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 3-10-1938

உதிர்வு 13-02-1994

### இளையதம்பி கனகலிங்கம்

அன்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், எல்லோருக்கும் இனியவராய் வாழ்ந்த எம் தந்தையே எங்கள் முன்னேற்றத்திற்கும், உயர்வுக்கும் வழிகாட்டியாய் இருந்த அன்புத் தெய்வமே! எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்தாலும் உங்கள் உருவமும், நினைவும் எங்கள் மனதை விட்டு எப்போதும் நீங்காது. எங்கள் அன்பு தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(7736)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு

13.08.1965

## சலுகைகட்டணத்தில் போட்டோஸ்ரட்

(யாழ்ப்பாணம்)
சலுகை கட்டணத்தில் யாழ் பொதுசன நூலகத்தில் "போட்டோஸ்ரட்" இயந்திரம் தனது சேவையை கடந்த வெள்ளி முதல் வழங்கி வருகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சேவையை பெற விரும்புகிறவர்கள் அலுவலக நேரங்களில் பெற்று கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## விரிவுரைகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக்கழக கலை வாரத்தை சிறப்பாக கொண்டாடும் வகையில் ஒரு வாரம் முழுவதுமாக கலைப்பீடமாணவர்களுக்கான விரிவுரைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15முதல் 18 வரையான திகதிகளில் விரிவுரைகள் நடைபெறாது என்றும் இக்காலத்தில் கலைகலாசார நிகழ்ச்சிகளும், உள்ளக வெளியக விளையாட்டுக்களும் நடாத்தப்பட்டு இறுதி வாரத்தில் சான்றிதழ்களும், வெற்றிக்கிண்ணங்களும், கேடயங்களும் வழங்கப்படவுள்ளது தெரிந்ததே.

இக் கலைவார நிகழ்வு மூன்றாவது தடவையாக யாழ்பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (05)

## வெளிவரவுள்ளது

இளம் கவிஞர்களின் ஆக்கங்களை வெளியிட்டு அவர்களின் ஆக்கத்திறனை ஊக்குவிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு கவிதை என்ற பெயரில் புதிய சஞ்சிகை ஒன்று அடுத்த மாதம் முதல் வெளியிடப்பட இருக்கிறது. தமது ஆக்கங்களை அனுப்பி வைக்க விரும்புவோர் கவிதை இல 1 ஒடைக்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

யாழ். மருத்துவமனை சிற்றூழியர்களின்

## தேவை பூர்த்தி செய்வதில் நிர்வாகம் அசமந்தப்போக்கு

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்தியசாலையின் சிற்றூழியர்களுக்கு தமது கடமையைச் செய்வதற்கு தேவையான அடிப்படை உபகரணங்கள் மற்றும் தற்பாதுகாப்பு அங்கிகளைப் பெற்றுத் தருவதில் தொடர்ந்தும் நிர்வாகம் பின் நிற்பதாகக் கூறப்படுகின்றது.

மலசல கூடங்கள் மற்றும் மலசல கழிவுகள் அகற்றும் குழிகளில் வேலை செய்யும் சிற்றூழியர்களுக்கு அதனைச் செய்வதற்கு முன்பாக அந்த ஊழியர்கள் அணிய வேண்டிய இத்துடன் சுத்திகரிப்பு தொழிலாளருக்கு வழங்க வேண்டிய மண்வெட்டி, விளக்குமாறு மற்றும் துடைப்பங்கள் ஒழுங்கானதாக இன்மையால் தொழிலாளர் பலத்த சிரமத்தை எதிர் நோக்கியே தமது கடமைகளை செய்ய வேண்டி இருப்பதை அவதானிக்க கூடியதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஊழியர் பற்றாக்குறை ஒருபுறமும், தொழில் செய்வதற்கான வளம் போதாமல் இருப்

## பொருளியல்

னும் இதன் காரணமாக ஏற்படும் பிரச்சினைகள் நாட்டுக்கு அதிக பாதிப்பினைக் கொடுப்பனவல்ல. வருமானங்களினது அளவிலும் பார்க்க கொடுப்பனவின் அளவு கூடுதலாக இருப்பின் அது 'சென்மதி நிலுவைப் பற்றாக்குறை' (பாதகமானநிலுவை) எனப்படும்.

உண்மையில் 'வருமானங்கள் எப்போதும் கொடுப்பனவுகளுக்கு சமனாக இருக்கும்' என்ற கணக்கியற் கோட்பாட்டிற்கு அமைய சென்மதி நிலுவை எப்போதும் சமநிலையிலேயே இருக்கும் எனினும் சென்மதி நிலுவையில் மிகை அல்லது குறை என்பது கொடுக்கல் வாங்கல்களின் ஒரு பகுதியில் இருந்து வரும் நிலுவையையே குறிக்கிறது. உதாரணமாக நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையாக அமையுமாயின் அதனை சரி செய்யும் வகையில் மூலதனக் கணக்கு மிகையினைக் கொண்டிருக்கும். அதேபோல் திரண்ட நிலுவை நேர்கணியமாக இருக்கும் போது நாணய அசைவுகள் எதிர் கணியமாக இருக்கும் எனினும் சென்மதி நிலுவையில் நடைமுறைக்கணக்கு மிகை அல்லது பற்றாக் குறையே முக்கியம் பெறுகிறது. உண்மையில் பல நாடுகளே சென்மதி நிலுவையின் உறுதிப்பாட்டினை அல்லது பலவீனத்தை நடைமுறைக்கணக்கு நிலுவையே நிர்ணயிப்பதாக இருக்கிறது.

எனினும் நடைமுறைக்கணக்கில் காணப்படும் சமநிலையின்மைகள் கட்டாயம் உறுதி குலைந்த சென்மதி நிலுவையைக்காட்ட வேண்டும் என்பதில்லை ஏனெனில் தனியார் முதலீடு நீண்ட காலக் கடன்கள் என்பவற்றைக் கொண்டு (இவை மூலதனக் கணக்கில் அடங்குவன) நாட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தி, காலப் போக்கில் உற்பத்தியினைப் பெருக்கி, ஏற்றுமதியினை அதிகரித்து ஏற்றுமதி வருமானத்தைக் கூட்டுவதன் மூலமும் இறக்குமதியைக் குறைத்து இறக்குமதி செலவைக் குறைப்பதன் மூலமும் நடைமுறைக்கணக்கில் ஏற்படும் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் தனியார் முதலீடு நீண்ட காலக் கடன்கள் என்பன இதற்கு உதவுகின்றன. இதனால் தான் நடைமுறைக்கணக்கு நிலுவையிலுள்ள பற்றாக்குறை முழுவதையும் பிரச்சினைக்குரியதாகக் கொள்வதில்லை. அதிலிருந்து தேறிய நீண்டகால

யாழ். கரையோரத்தை அண்டிய பகுதி

## கிடங்கு குட்டைகள் மூட நடவடிக்கை எடுக்கவில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ். நகர கடற்கரையோரங்களில் உள்ள நீர்த்தேக்கப் பகுதிகளை நிரவ மாநகரசபை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனாலேயே நுளம்புப் பெருக்கம் யாழ். நகரில் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கடற்கரையை அண்டிய இடங்களில் ஏராளமான இடங்களில் குப்பைகள், குட்டைகள் உள்ளன. இதேபோல நகரத்தின் மத்திய பகுதியில் பாழடைந்த கால்வாய்கள், கிணறுகள் உள்ளன.

மாரிகால மழையினால் வழிந்தோடிய வெள்ளம், தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ளது இந்த மழை நீர் கடலுக்குச் சென்று கலப்பதற்குரிய நடவடிக்கையை யாழ். மாநகரசபை எடுக்கவில்லை.

இதன் காரணமாக யாழ். மாநகரசபை எல்லைபகுதிக்குள் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

கடற்கரையோரங்களில் உள்ள நீர் தேங்கும் தாழ்வுப் பகுதிகளை மாநகரசபை நிரவ முன்வராவிடில் இனி வரும் காலத்தில் மலேரியா நோயினால் பலர் பயங்கரமாகப் பாதிக்கப்பட வேண்டிவரும் இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது. (நி)

கணித ரீதியாக சென்மதி நிலுவை எப்போதும் சமப்படுத்தப்பட்டே இருக்கும் எனினும் ஒரு நாடு தனது சென்மதி நிலுவையை சமப் படுத்துவதற்கு

- வெளிநாட்டுச் சொத்துக்கள் பயன்படுத்தியாலோ அல்லது
- வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றிருந்தாலோ

அந்நாடு சென்மதி நிலுவைப் பிரச்சினையை எதிர் நோக்குகிறது என்பதைக் குறிக்கும்.

ஓர் இரு ஆண்டுகளுக்கு மட்டும் சென்மதி நிலுவையில் பாதக நிலை அனுபவிப்பின் அந்நாட்டினை சென்மதி நிலுவைப் பிரச்சினையை அனுபவிக்கின்ற நாடு என்று கூறுவதில்லை. தொடர்ந்துபல ஆண்டுகளுக்கு சென்மதி நிலுவையில் பாதக நிலையினை அனுபவிக்கும் நாட்டினையேசென்மதி நிலுவைப் பிரச்சினையை அனுபவிக்கின்ற நாடு என்று கூறப்படும். வளர்முக நாடுகள் பலவும் சென்மதி நிலுவைப் பிரச்சினையை அனுபவித்து வருகின்றன இப்பிரச்சினையே அந்நாடுகள் தொடர்ந்தும் வளர்முக நாடுகளாக இருப்பதற்கு காரணமாகவும் அமைகின்றது 1956ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் தொடர்ந்து சென்மதி நிலுவைப் பிரச்சினை நிலவுகிறது

(மிகுதி அடுத்தவாரம்)

### இலங்கையின் சென்மதி நிலுவை 1992

| விடயம் | தொகை (மி. ரூபா) |
|---|---|
| 1. வணிகப் பொருள்கள் | - 42354 |
| ஏற்றுமதிகள் | 110052 |
| இறக்குமதிகள் | 152406 |
| 2. பணிகள் | —1197 |
| பெறுகைகள் | 30100 |
| கொடுப்பனவுகள் | 31297 |
| 3. பொருள்களும் பணிகளும் (1+2) | —43551 |
| 4. மாற்றல்கள் (தேறியது) | 28396 |
| தனியார் ( ,, ) | 20369 |
| அலுவல்சார் ( ,, ) | 8027 |
| 5. நடைமுறைக் கணக்கு நிலுவை (3+4) | —15155 |
| 6. நாணயமல்லா மூலதனம் (தேறியது) | 20954 |
| நேரடி முதலீடு | 5226 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 1121 |
| தனியார்: | |
| நீண்டகாலக் கடன் (தேறியது) | 1144 |
| குறுங்காலக் கடன் ( ,, ) | 4288 |
| அரசு: | |
| நீண்டகாலக் கடன் ( ,, ) | 10470 |
| குறுங்காலக் கடன் ( ,, ) | —1295 |



பிறப்பு

13.08.1965

வீரச்சாவு

14.03.1988

## கப்டன் வாதவூரன்

(தம்பையா யோகேஸ்வரன்)

இந்தியப் படைகளை எதிர்த்து நின்று
சிந்திய குருதியால் இம்மண் சிவந்திட
முந்தி நீ பிரிந்தாய்!
ஆறென்ன ஆண்டுகள் நூறு போனாலும்
நீறாக - எம்முன் நெருப்பாக உன் நினைவு;

கனகபுரம்,
கிளிநொச்சி. (7729)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

தொடர்ந்தும் நிர்வாகம் பின் நிற்பதாகக் கூறப்படுகின்றது;

மலசல கூடங்கள் மற்றும் மலசல கழிவுகள் அகற்றும் குழிகளில் வேலை செய்யும் சிற்றூழியர்களுக்கு அதனைச் செய்வதற்கு முன்பாக அந்த ஊழியர்கள் அணிய வேண்டிய சுகாதார பாதுகாப்பு கவசங்கள் வழங்கப்படுவதில்லை என்றும், இதனைப் பெற்றுத் தருவதில் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஏனோ தானோ என்ற நிலையைக் கடைப்பிடித்து வருவதாகவும் மேலும் தெரிய வருகின்றது;

நோக்கியே தமது கடமைகளை செய்ய வேண்டி இருப்பதை அவதானிக்க கூடியதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஊழியர் பற்றாக்குறை ஒரு புறமும், தொழில் செய்வதற்கான வளம் போதாமல் இருப்பது மற்றுமொரு புறமும் நெருக்குவது யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதார சூழலை மேம்படுத்துவதை தடுப்பதாகவும், இதற்கும் மத்தியில் அதிகாரிகளின் கெடுபிடிகள் மட்டும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக ம் கூறப்படுகின்றது; (நி)

லீடு நீண்ட காலக் கடன்கள் என்பன இதற்கு உதவுகின்றன; இதனால் தான் நடைமுறைக்கணக்கு நிலுவையிலுள்ள பற்றாக்குறை முழுவதையும் பிரச்சினைக்குரியதாகக் கொள்வதில்லை; அதிலிருந்து தேறிய நீண்டகால மூலதனத்தினைக் கழித்தபின் வருகின்ற பகுதியினையே (அடிப்படை நிலுவை - Basic Balance) பிரச்சினைக்குரியதாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் அதனைத்தீர்த்துக் கொள்வது கடினமாய் இருப்பதனாலாகும்;

| | |
|---|---|
| நேரடி முதலீடு | 5226 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 1121 |
| தனியார்: | |
| நீண்டகாலக் கடன் (தேறியது) | 1144 |
| குறுங்காலக் கடன் ( ,, ) | 4288 |
| அரசு: | |
| நீண்டகாலக் கடன் ( ,, ) | 10470 |
| குறுங்காலக் கடன் ( ,, ) | —1295 |
| 7. பெறுமதிச் சீராக்கங்கள் | 1554 |
| 8. சி. எ. உ. ஒதுக்கீடுகள் | —— |
| 9. பிழைகளும் தவிர்ப்புகளும் | + 1838 |
| 10. மொத்த நிலுவை (5+6+7+8+9) | + 9191 |
| 11. நாணய அசைவுகள் | — 9191 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை -1992


## பகவான்

## ஆங்கில மருத்துவ சேவை


14-3-94 முதல் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (டாக்டர் சண்முகலிங்கம் வீட்டிற்கு சற்று முன்பாக) என்ற முகவரியில் மேற்படி சேவை இரு நேரமும் இயங்குவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்.
பகவான் மருந்தகம்,
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்;

[சி-8825]



உறுதியான கணனிக் கல்விக்கு
வெலிங்டன் சந்திக்கருகில்



# UNIKCO

## COMPUTER CENTRE

- WORD PROCESSING (Word Star Rel 5. 5) and MS - DOS
- dBASE III PLUS and MS - DOS
- LOTUS 1 - 2 - 3 and MS - DOS
- BASIC LANGUAGE (Including Graphics, Sounds and Files)
- DATA ENTRY OPERATOR TRAINING

COMPUTER துறை சம்பந்தப்பட்ட சகல இலவச ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதன் மூலம் உங்கள் நேரம் வீணாவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

18 - 3 - 94 (வார நாட்கள்)
19 - 3 - 94 (வார இறுதி நாட்கள்)

∴ குறிப்பு:- தொழில் புரிவோரின் நன்மை கருதி மாலை 4. 30 வகுப்புகளும் நடை பெறுகின்றன;

மேலதிக விபரங்கட்கு:

UNIKCO COMPUTER CENTRE
37, CLOCK TOWER ROAD,
JAFFNA

(சி-8831)


## 31-ம் நாள் நினைவஞ்சலி
## சபிண்டீகரண அழைப்பும், நன்றி நவிலலும்

## அமரர் திருமதி சரஸ்வதி அருணாசலம்

தோற்றம்: 06-01-1924 மறைவு: 13-02-1994

15-03-94 நாளை செவ்வாய்க்கிழமை எமது மறைந்த தாயாரின் சபீண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மேலும் எமது அன்னையின் இறுதிக் கிரியையிலும், மலர் வளையம் செலுத்திய அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும், மேற்கொண்டு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்;

உசன்
விடத்தற்பளை,
மிருசுவில்.

அ. ஜெகநாதன் (மூத்தமகன்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7731)

தொல்புரம் வழக்கம்பரை
## முத்துமாரியம்மன் தேவஸ்தான
## பரிபாலன சபை

கடந்த 04-03-1994-இல் வழங்கப்பட்ட மேற்படி தேவஸ்தானம் தொடர்பான காவல்துறையின் தீர்ப்பு ஒன்றின் மூலம், பரிபாலன சபையே சகல நிர்வாக விடயங்களையும் பொறுப்பேற்றுள்ளமையால், பின்வரும் அன்பான வேண்டுகோளை அம்பாள் அடியார்களுக்கு விடுக்கின்றோம்:

1. சகல அன்பளிப்புப் பொருள்களையும் காரியாலயத்தில் ஒப்படைத்து உரிய பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுதல்;
2. சகல அர்ச்சனைகளுக்கும் அர்ச்சனைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளுதல்;
3. சகல உற்சவங்களுக்கும், விசேட அபிஷேகங்களுக்கும். மற்றும் பிறவற்றிற்கும் பரிபாலன சபை காரியாலயத்தோடு தொடர்பு கொள்ளுதல்.

உங்கள் பரிபூரண ஒத்துழைப்பினை நாடி நிற்கின்றோம்

தொல்புரம்,
சுளிபுரம். 94-03-12

- நிர்வாக சபை

(7735)

### சிந்தனைக்கு

எறும்புகள் சிறந்த குடிகள். தங்கள் இன நலனையே அவை தலையாயதாகப் போற்றுகின்றன.

— ஹென்றி டேவிட் தோரோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# தமிழ்க்குழுக்களின் ஏமாற்றம்

வரலாற்றை பலர் அறிந்து வைத்துள்ளார்கள், ஆனால், அதிலிருந்து அவர்கள் பாடம் கற்கத் தவறி விடுகின்றார்கள். ஆனால், வரலாற்றுப்பாடமொன்றை மீண்டும் அனுபவத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் போது அங்கலாய்க்கின்றனர். இந்நிலையில் இன்றுகொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் உள்ளனர்.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசாங்கம் தயாராகி வருவதாக வெளிவரும் தகவல்கள் குறித்து தமிழ்க்குழுக்கள் தற்பொழுது அங்கலாய்க்கத் தொடங்கியுள்ளன. இதுகுறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஈ. பி. ஆர். எல். எப். கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சியானது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்பிய தமிழ்க்குழுக்களை ஏமாற்றி வஞ்சிப்பதற்குச் சமமான செயல் எனக் குற்றம் கூறியுள்ளது.

அத்தோடு, 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போது இந்த வாக்கெடுப்பு ஒரு போதும் நடத்தப்படமாட்டாது எங்கள் மக்களைத் திருப்திப்படுத்தவே இந்தச் சரத்து சேர்க்கப்பட்டுள்ளது என இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி தமக்கு உறுதி அளித்ததாகவும் தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் அரசியல் வரலாறு தமிழர்களை ஏமாற்றும் வரலாறு என்பதை இன்று சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல, சிறிலங்காவில் ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமுமே தமிழர்களை ஏமாற்றாமல் இல்லை, தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக் கொண்டதாகவுமில்லை இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி என்ற வேறுபாடே இல்லை. அன்றி, ஆட்சியில் அமர்ந்த கட்சிகளுக்கு உறுதுணையாக இருந்த இடதுசாரிகள் கூட தமிழர் பிரச்சினையில் சரியாகவோ, நேர்மையாகவோ நடந்து கொள்ளவுமில்லை.

இந்நிலையில் விஜேதுங்கா அரசாங்கம் மட்டும் தமிழர் விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்ளுமென

# காஷ்மீர் பிரிந்தால் இந்தியாவிலுள்ள 12 கோடி முஸ்லிம் நிலை என்ன?

## ஈரான் சபாநாயகரிடம் இந்திய அமைச்சர் கேள்வி

(தெஹ்ரான்)

மதஅடிப்படையில் காஷ்மீர் இந்தியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டால் இந்தியாவில் வாழும் 12கோடி முஸ்லிம்களின்நிலை என்னவாக இருக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தினேஷ்சிங் ஈரான் சபாநாயகர் அலிஅக்பர் ஹாஷிமி றப்சன் ஜானியை கடந்த ஞாயிறன்று தெஹ்ரானில் சந்திக்கும் போது வினவினார்.

மேலும் தினேஷ்சிங் தெரிவிக்கையில், காஷ்மீர் பிரிந்து சென்றால் ஈரான், சீனா, பாகிஸ்தான் ஒருமைப்பாட்டிற்கு பயங்கரமாக மாறிவிடும் பாகிஸ்தான் விரும்பியவாறு நடைபெற்றால் ஆசியாவில் உள்நாட்டு யுத்தம் ஏற்படுமெனவும் எச்சரித்தார்.

பாகிஸ்தானின் வன்செயல் தூண்டும் போக்கு ஒருபுறம் இருக்க இந்தியா நிபந்தனையற்ற காஷ்மீர் பேச்சுவார்த்தைகளை எதிர்பார்த்திருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

# தெ. ஆ. வில் வெள்ளையர் நாடு நெல்சன் மண்டேலா நிராகரிப்பு

(ஜோகானஸ்பர்க்)

தென்னாபிரிக்காவில் வெள்ளையர் நாடு (வோக்ஸ்டாட்) என்ற வலதுசாரி வெள்ளையர்களின் கோரிக்கை நான் உயிரோடு இருக்கும் வரை நிறைவேறாது என்று தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

வடடிரான் ஸ்வாரில் கறுப்பர் பகுதி ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பல இனத் தேர்தலில் தமது கட்சி நிச்சயம் வெற்றி பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இன ஒதுக்கலுக்கு பிற்பட்ட தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களின் அச்சத்தைப் போக்கதாம் விரும்புவதாகக் கூறிய மண்டேலா இனசமத்துவம், பெரும்பான்மை ஆட்சி என்ற இரு கொள்கைகளையும் வலியுறுத்தினார்.

நவநாஸி ஆபிரிக்கர் எதிர்ப்பு இயக்கம்' இன ஒதுக்கல் ஆதரவு கன்சர் வேட்டிவ் கட்சி உட்பட பல வலதுசாரி வெள்ளையர்கள் தமது தனி நாட்டுக் கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் சிவில் யுத்தம் ஏற்படுமென எச்சரித்திருப்பது தெரிந்ததே.

# தி.மு.க. வளர்ச்சி அடையாமைக்கு கருணாநிதிதான் காரணம்

## - வை. கோ. குற்றச்சாட்டு

(சென்னை)

அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் தி.மு.க வளர்ச்சி அடையாமைக்கு கருணாநிதி தான் காரணமாகும் என்று தி.மு.க. (வை கோ அணி) பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் குன்றத்தூர் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், எதிர்ப்புகளுககு மத்தியிலே வளர்ந்ததுதான் தி.மு.க. லட்சிய வாதிகளின் பாதை மலர்கள் விரித்த பயணமல்ல அது கல்லும் முள்ளும் நிறைந்த பகுதி என்பதும், காட்டாறுகளைக் கடக்க வேண்டியிருக்கும் என்பதும், வெடித்துச் சிதறும் நெருப்புக் கோளத்தைச் சந்திக்க வேண்டியதிருக்கும் என்பதும், எந்தக் கணத்திலும் உயிர் கொடுக்கக்கூடிய எதிரிகளின் தாக்குதலை முறியடிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதும் அறிந்து கொண்டிருக்கிறோம்.

திராவிட இயக்கத்தினுடைய கொடி சென்னை செயின்ட் ஜார்ச் கோட்டையிலே பறந்தபோதும், இந்த நாட்டுக்கு வரவேண்டிய திட்டங்கள் ஏன் வரவில்லை? பெறவேண்டிய உரிமைகள் ஏன் பெற முடியவில்லை? அண்ணாவின் மறைவுக்குப் பின்னால் சுயநல அரசியல் காரணமாக இயக்கம் வளரவில்லை உடைக்கப்பட்டதற்கு யார் காரணம்? கருணாநிதிதான் காரணம்.

இன்றைக்கு வை கோ. என்கிற பிரச்சினை தனிநபர் பிரச்சினை அல்ல. இயக்கத்திற்காக பாடுபட்ட எத்தனையோ வீரத்தழும்புகளை பெற்ற மூத்த தலைவர்கள் பலர் இன்று இங்கு நிற்கின்றனர். இது வை கோ. என்ற நபருக்காக அல்ல நியாயத்திற்காக - நீதிக்காக - உட்கட்சி ஜனநாயகத்திற்காக வானும், கடலும், நிலமும், எப்படி நிலையாக இருக்கிறதோ; அதுபோல அண்ணா உருவாக்கிய தி. மு. க வும் நிலையாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

# சட்டம் ஒழுங்கு நிலைமை தமிழகத்தில் மோசம்

## வாழப்பாடி இராமமூர்த்தி

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் சீர்கெட்டுப் போயிருப்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தமிழர் மூவர் தப்பியமையும் தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை சம்பவங்கள் அதிகரித்து இருக்கின்றமையும் இதனைக் காட்டுவதாகவும்

# தென்ஆபிரிக்கா மோதல் சுமார் 50 பேர்வரை பலி

(ஜோகானஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவில் மீண்டும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் சுமார் ஐம்பது பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். கறுப்பர்களின் முக்கிய நகரப் பகுதியொன்றில் ஐயாயிரத்துக்கும்அதிகமான தீவிர வலதுசாரிகள் ஆயுதபாணிகளாகப் பிரவேசித்ததைத் தொடர்ந்து வன்முறைகள் வெடித்தன. வெள்ளையினத் தீவிரவாதிகளுக்கும் ஆபிரிக்க எதிர்ப்பு முன்னணியினருக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றன. இச்சண்டைகளில் சுமார் ஐம்பதுக்கும் அதிகமானோர் கொலைப்பட்டுள்ளனர்.

தென் ஆபிரிக்காவில் அடுத்த மாதத்தில் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கிய நிலையில் முதலாவது பொதுத் தேர்தல் நடக்க இருப்பது தெரிந்ததே

# கச்சதீவை மீளப்பெற இந்தியா முயற்சிக்கட்டும்

## தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி

(சென்னை)

இந்திய மீனவர்களின் நலன்களையும் உயிரையும் பாதுகாக்க அந்தத் தீவை மீளப் பெற்றுக் கொள்வதைத் தவிர இந்தியாவுக்கு மாற்று வழி இடையாது இவ்வாறு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

அண்மையில் பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், கச்சதீவு தொடர்பாக 1974இல் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் நிபந்தனைகளை செயற்படுத்த இலங்கை மறுத்தால் இதனை செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் கச்சதீவுப் பகுதியை கையளிக்கும் போது இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட உடன்பாட்டில் காணப்பட்ட நிபந்தனைகள் இந்திய மீனவர்களதும், உல்லாசப் பயணிகளதும் உரிமை மற்றும் சலுகைகளைப் பாதிக்கவில்லை, ஆனால் தி. மு.க. அரசு கலைக்கப்பட்ட பின்னர் 1976இல் இரு அரசாங்கங்களும் கடிதத் தொடர்புகள் மூலம் உடன்சடிக்கை நிபந்தனைகளில் சில மாற்றங்களைச் செய்தன. இவை இந்திய மீனவர்களின் நலன்களுக்கும் குந்தகமாகின எனவும் தெரிவித்தார்.

# ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு பணிப்பாளர் அழைப்பு

(நல்லூர்)

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அரச அதிபர் பணிமனையில் நடைபெறும் சந்தர்ப்பங்களில் இக் கூட்டங்களில் கல்வி சம்பந்தமான விடயங்கள் ஆராயப்படும் போது இது தொடர்பாக விளக்கம் அளிக்கவென செய்யும் நோக்குடன் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ள அவர்களுக்கு அவசியம் அழைப்பு விடப்பட வேண்டும் என சகல அரச அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.ஏ. சி. மொகைதீன் தெரிவித்துள்ளார். (17)

# நிதி நெருக்கடி நிலையில் போதனா மருத்துவமனை

(யாழ்ப்பாணம்)

பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி இருப்பதால் யாழ். போதனா வைத்தியசாலை வருடா வருடம் ஊழியர்களுக்கு வழங்கும் வங்கிக் கடன் இம்முறை வழங்கப்படமாட்டாது எனக் கூறப்படுவதற்கா சுமார் ஆயிரம் ரூபா வரையில் சம்பள முற்பணமாக கடன் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே. எனினும் இவ்வாண்டு இக்கடன் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் குறிப்பாக

இந்நிலையில் விஜேதுங்கா அரசாங்கம் மட்டும் தமிழர் விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்ளுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அதுவும் முன்னைய சிங்களத் தலைவர்கள் போல் அல்லாமல் நேரடியாகவே பௌத்த பேரினவாதத்திற்குத் தலைமை தாங்க முற்படும் டி. பீ. விஜேதுங்கா தமிழரின் தாயகக் கோட்பாட்டை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்? ஜனநாயக வழிமுறைகளுக்கு மதிப்பளிப்பார் என இத்தமிழ்க் குழுக்களால் எதன் அடிப்படையில் எதிர்பார்க்க முடிந்தது.

மேலும், ராஜீவ்காந்தி வடக்கு - கிழக்கு பிரிக்கப்படாதுஎன உறுதி அளித்திருப்பினும், ராஜீவ்காந்தியுடன் உடன்பாடு செய்து கொண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனா கையொப்பம் இட்ட மை காயும் முன்னரே தான் வடக்கு - கிழக்கு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பின் போது பிரிவினைக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யப் போவதாகத் தெளிவாகவே அறிவித்து விட்டார்.

அத்தோடு, எழுத்து மூலமான உடன்பாடுகளையே துச்சமெனக் கிழித்தெறியும் சிங்கள ஆட்சியாளர்களின் வாய்மொழி உறுதியை நம்பி ராஜீவ்காந்தி உறுதி கூறினார் என்றால், அதனை நம்பிச் செயற்பட்ட தமிழ்க் குழுக்களின் அரசியல் அறிவினை எப்படி மதிப்பிடுவது?

அரசியற் சூழ்நிலை என்பது நிமிடத்திற்கு நிமிடம் மாறக்கூடியது. இன்று நெருங்கி இருப்பவர்கள் நாளை போரிடவும் கூடும். அத்தோடு அடிக்கடி மாறும் அரசியல் தலைமைத்துவம் என்பன இருக்கையில் வாய்மொழிகளை மட்டும் எவ்வாறு நம்பி ஒரு பெரும் அரசியல் தீர்மானத்தை எடுக்க முடியும். எடுத்துக் காட்டாக 1987இல் இலங்கை - இந்திய உடன்பாட்டைச் செய்த ராஜீவ்காந்தி இன்று உயிருடன் இல்லை, ஜே. ஆர். அதிகாரத்தில் இல்லை. இந்நிலையில் ராஜீவ் வழங்கிய வாக்குறுதிகள், ஜே. ஆர். ஒப்புக்கொண்ட விடயங்களை நிறைவேற்றுவது யார்? கேட்பவர் யார்?

இவற்றைப் புரிந்து கொள்ளாது, அரசியலில் ஈடுபடுவதும், பின்னர் தமது தவறான முடிவுகளை மூடிமறைக்க, ஏமாற்றி விட்டனர். வஞ்சித்து விட்டனர் எனக் கூறுவது சிறுபிள்ளைத்தனமானதாகும். சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதுமே நேர்மையைக் கடைப் பிடிக்கவில்லை; ஜனநாயகம் பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லை ஆகையினால் அவர்கள் தற்பொழுது மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பார்த்து விட்டு ஏதோ புதிதாக நடந்ததுபோல், வஞ்சித்துவிட்டார்கள் எனக் கூறுவது தம்மை தாமே ஏமாற்றிக் கொண்டதற்கும் மக்களை ஏமாற்றுவதற்கும் கூறும் விளக்கமே ஒழிய, அவர்கள் ஏதோ புதிதாகச் செய்து விட்டார்கள் என்று கூறுவதற்கில்லை.

தாக்குதலை முறியடிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதும் வரலாற்றில் நாங்கள் படித்திருக்கிறோம். அச்சத்தை தூக்கியெறிந்தவனுக்கு அலைகடல் ஒரு பந்தய மைதானம் என்ற உணர்வோடுதான் இயக்கத்திலே எதிரிகளை ஒப்படைத்துக்

ங்கு நிலைமை மிகவும் சீர்கெட்டுப் போயிருப்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார். சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், திருச்சி விசேட தடுப்பு முகாமிலிருந்து இலங்கைத்

ள்ளை சம்பவங்கள் அதிகரித்து இருக்கின்றமையும் இதனைக் காட்டுவதாகவும், இதனைக் கண்டித்து காங்கிரஸ் உட்பட ஆறுகட்சிகள் தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டியிடம் புகார் மனுவொன்றைக் கையளிக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜர்களுக்கு வழங்கும் வங்கிக் கடன் இம்முறை வழங்கப்படமாட்டாது எனக் கூறப்படுகின்றது.

வருட ஆரம்பத்தின்போது ஊழியர்கள் தமது பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்கள் கொள்வனவு செய்

ரென நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் குறிப்பாக பாடசாலை செல்லும் பிள்ளைகளுடைய ஊழியர்களின் குடும்பங்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (நி

# தோ. தொழிலாளர் நலன் பேண அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்

## ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டாத தோட்ட முகாமைத்துவங்கள் நீக்கப்பட்டு பொருத்தமான முகாமைத்துவங்களுக்கு தோட்டங்களை அரசு கையளிக்கும்.

இவ்வாறு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் காலி மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், சுதந்திரக்கட்சி அதிகாரத்தில் இருந்தபோது பெருந்தோட்டங்கள் ஜனவசம வீடம் கையளிக்கப்பட்டது. தோட்டத் தொழிற்துறையின் வீழ்ச்சி அப்போது தான் ஆரம்பித்தது. ஐ. தே. க அதிகாரத்திற்கு வந்த பின்னர் தோட்டங்களை அரசாங்கமே நிருவகித்து வந்தது. எவ்வாறெனினும் தோட்டங்களை இலாபகரமாக இயக்க வைப்பது சாத்தியமாக இல்லை. என்றே எமக்கு தோன்றியது. தோட்டங்களை நிர்வகிக்க அரசாங்கப் பணத்தில் நாற்பது கோடி ரூபாவை மாதாந்தம் செலவிட வேண்டியிருந்தது இதனால் தான் தோட்ட முகாமைத்துவம் தனியார் கம்பெனிகளிடம் விடப்பட்டது.

இப்போது தோட்டங்களால் திறைசேரிக்கு நட்டமோ விரயமோ ஏற்படுவதில்லை எனினும் தனியார் கம்பனிகளிடம் முகாமைத்துவம் இருந்தாலும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அரசாங்கம் தலையிடவே செய்கிறது. உற்பத்தி அதிகரிப்பிலும், தொழிலாளர் நலனிலும் விஷேட கவனம் செலுத்துமாறு முகாமைத்துவங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எமது அறிவுறுத்தல்களுக்கு இசைவாக செயற்படாத முகாமைத்துவங்களை அகற்ற நாம் தயங்கப்போவதுஇல்லை எனவும தெரிவித்தார்.

# சர்வசன வாக்கெடுப்பை சர்வதேசம் தடுக்கவேண்டும்

## ஈ. பி. ஆர். எல். எப். கோரிக்கை

தமிழ் மக்களின் வாழ்க்கையோடு விளையாடும் சர்வசன வாக்கெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசின் மீது சகலவழியிலும் நிர்ப்பந்தங்களை உருவாக்கவேண்டும் இவ்வாறு ஈ பி ஆர். எல்.எப் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையொன்றில் மேலும் குறிப்பிடுகையில், இந்திய இலங்கை உடன்பாடு உருவான சமயத்திலேயேவடக்கு,கிழக்குமாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்படுவதற்குப் பதிலாக நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும் என்பதே வலியுறுத்தப்பட்டிருந்தது. இலங்கை இந்திய உடன்பாட்டை எந்தளவுக்கு விசுவாசமாக இலங்கை அரசு அமுல் செய்தது என்பதே கேள்விக்குரிய விடயமாகும்.

எரிந்து கொண்டிருக்கும் இப் பிரச்சினைக்கு சரியான அரசியல் தீர்வு ஒன்றைக் காண முயற்சிக்காமல் சர்வசன வாக்கெடுப்பை நடத்த முயற்சிப்பது தமிழ் பேசும் மக்களின் மனத்தில் மேலும், மேலும் அவநம்பிக்கையை ஏற்படுத்துவது மாத்திரமல்ல, இந்த நாட்டின் பேரழிவை ஏற்படுத்துவதோடு இரத்த ஆறு ஓடுவதற்கான அரசின் தூண்டுதல் முயற்சியாகவுமே இருக்கும்.

# ஜனாதிபதி தேர்தலில் நானே போட்டியிடுவேன்

## திருமதி சிறிமாவோ அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன், வெற்றி பெற்றதும் இன்று இருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிவிடுவேன் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டு அரசியலில் இருந்து நிரந்தரமாக ஓய்வு பெறுவேன். இவ்வாறு எதிர்க் கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்தார்

காலி மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தமதுரையில் மேலும் கூறுகையில், இன்றைய அரசாங்கத்தில் பிள்ளைகளை இழந்த தாய்மார்கள், கணவனைப் பறிகொடுத்த கைப்பெண்கள், சகோதரர்களை இழந்த சகோதரிகள் பல்லாயிரக்கணக்கில் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள் தாய்மார்களுக்கு பொதுசன ஐக்கிய முன்னணியினால் மட்டுமே விமோசனம் கிடைக்கமுடியும் எனவும் தெரிவித்தார்.

# தமிழ் கிராமவாசிகள் மீது சிங்களப் பொலிஸ் கெடுபிடி

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்ட தமிழ்க் கிராமங்களான கரப்பளை சரவணப்பிட்டி ஆகிய கிராமங்களில் வாழும் தமிழ் மக்கள் மீது வெலிக்கந்தைப் பகுதி பொலிசார் பல கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கரப்பளை கிராமத்தைச் சேர்ந்த வையாழிமுத்து வேல், சநாதன் யோகராசா, கண்ணமுத்து புஷ்பராசா, கைலாயபிள்ளை தியாகராசா வேலப்பு வீரக்குட்டி, பொன்னையா புவனேந்திரன் ஆகியோர் கடந்த மாதம் 28ஆம் திகதி பொலிசாரால் கைது செய்யப்பட்டு வெலிக்கந்தை பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாகவும், இவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது. மேலும் ஆறு மாதங்களுக்கு முன்னர் இப் பகுதியில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்ட மகேந்திரராசா மற்றும் இருபது நாட்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட சிவஞானம் லோகேஸ்வரன் போன்றோருக்கு என்ன நேர்ந்தது என்பதும் இதுவரைதெரியவில்லையாம்.

# கனடாவிலிருந்து தொண்டமானுக்கு எம்.பி. ஒருவர் மீண்டும் அழைப்பு

(ரொரன்ரோ)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சு நடாத்த கனடாவிற்கு வருமாறு மீண்டும் கனடிய எம்.பி. ஒருவர் அமைச்சர் தொண்டமானுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த வாரம் கனடிய எம்.பியான ஜோன் சேர்லா சென்ற் என்பவர் ஒன்ராறியோ நகருக்கு அமைச்சர் தொண்டமான் வந்து கனடிய தலைவர்களை சந்திக்குமாறு வேண்டிக் கொண்டுள்ளார்.

இதேபோன்று முன்னரும் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய அமைச்சர் தொண்டமானை கனடா வருமாறு பல கனடிய அமைப்புக்களும் கனடிய சட்டவியல் நிபுணரான மக்ஸ்பேர்கர் என்பவரும் அழைப்பு விடுத்திருந்தனர். எனினும் இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம் இதில் வெளியார் தலையிட முடியாது என ஜனாதிபதி விஜேதுங்கா அமைச்சர் தொண்டமானை அழைத்து கூறியதையடுத்து அமைச்சர் தனது கனடிய பயணத்திட்டத்தை கைவிட்டமை தெரிந்ததே.

## ஆஸ்பத்திரிக்கு சீமெந்து எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ். போதனா வைத்தியசாலையின் புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான சீமெந்தை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

மேற்படி யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவைப்படும் சீமெந்தைக் கொள்வனவுசெய்ய அதன் நிர்வாகத்தினர் பலமுறை முயற்சி செய்து பயனளிக்காமல்போனதுடன் இம்முறையும் அது கைகூடவில்லையென அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பா, தி)

# கடல்வலய சட்ட நீக்கம் ஜனாதிபதியாலே தீர்மானிக்கப்பட்டது

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடல்வலயச் சட்டத்தை கடந்த முதலாம் திகதி முதல் நீக்கிக் கொள்வது என்ற தீர்மானம் சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவினால் எடுக்கப்பட்டது எனவும் இந் நிலையில் அண்மையில் கடலில் கடற்படைத் தாக்குதலால் நேர்ந்த மரணங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் நிதிச்செயலாளர், பாதுகாப்பு செயலாளர், கடற்படை தளபதி ஆகியோருடன் தொடர்பு கொண்ட பின்னரே ஜனாதிபதி இத் தீர்மானத்தை மேற்கொண்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

## தூயகணித ஆசிரியர்களின் விபரம் கோரப்பட்டுள்ளது

(நல்லூர்)

க.பொ.த. உயர்தர வகுப்பில் தூயகணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப போதனையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் ஆசிரியர்களுக்கு விநியோகம்செய்வதற்காகதேசிய கல்வி நிறுவனமும் கல்வித் திணைக்களமும் ஒன்று சேர்ந்து தயாரித்த தூயகணித பாடப் புத்தகம் இவ் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய பெயர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் க.பொ.த உயர்தர வகுப்பில் தூயகணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர், விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுள்ளது. (17)

### யாழ். போதனா வைத்தியசாலைக்கு

## இரத்தப் பரிசோதனைக்கு விசேட கருவி தருவிப்பு

(யாழ்ப்பாணம்)

இரத்தத்தில் உள்ள நோய்க்கிருமிகளை இனம் காண்பதில் உள்ள சிரமத்தைப் போக்க யாழ். போதனா வைத்தியசாலைக்கு புதிய இரு கருவிகள் எடுத்துவரப்பட உள்ளன.

இக் கருவிகள் இரத்தத்தில் காணப்படும் நோய்க் கிருமிகளைக் கண்டுபிடிப்பதற்கு உபயோகிக்கப்படும்.

சில நோய்களை இனம் காண்பதில் உள்ள சிக்கலைப் போக்கவே இக் கருவிகள் எடுத்துவரப்பட இருக்கின்றன.

யாழ். அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து இவற்றை எடுத்துவருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

விலேம் போஷ்டேர மீற்றர் என்ற ஒரு கருவியும் வேறொரு கருவியுமே யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட உள்ளன.

இக் கருவிகள் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டது. (தி, பா)

## பிரியாவிடை வைபவம்

(மல்லாகம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், தற்போதைய உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. ந. சிவபாதன் அவர்களுக்கு, பிரியாவிடை வைபவமொன்று இன்று காலை 8.30மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப் பிரியாவிடையை, அருணோதயாக் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர் சங்கம் என்பன இணைந்து அளிக்கவுள்ளனர். (09)

# சமாதானபேச்சுவார்த்தைக்குயாழ்வர 135 பிக்குகள் விருப்பம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக யாழ்ப்பாணம் செல்ல சம்மதம் தெரிவித்துள்ள பௌத்த பிக்குகளுக்கான ஆலோசனை மாநாடு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளதாக ஜனதா சம்பத் சுரகிம பெரமுன தெரிவித்துள்ளது.

மேற்படி பேச்சுவார்த்தைக்கு சுமார் நூற்றி முப்பத்தி ஐந்து பேர் இவ்வாறு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் இவர்கள் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாகவும் ஏப்ரல் மாதம் பதினொராம் திகதி மேற்படி ஆலோசனைக் கூட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளதாகவும் ஜனதா சம்பத் சுரகிம பெரமுனயின் பொதுச் செயலாளர் மாதெம்பே அஸ்கிரிய மேதம்கோ தேரோ "லங்கா தீப" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

## கணக்கியல், கணக்காய்வு பயிற்சிநெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தொடர்பான பயிற்சிநெறியொன்றை நடாத்தவுள்ளது. இப் பயிற்சி நெறிக்கு க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் சித்தி அடைந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் எதிர்வரும் 16ஆம்திகதி காலை 9.00மணிக்கு கந்தர்மடம் யாழ்ப்பாணத்திலுள்ள யாழ். மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். இப் பயிற்சி நெறிக்கான செலவு முழுவதும் நிதித்துறையினரால் ஈடுசெய்யப்படும் எனவும் வேறு கற்கை நெறியில் கற்றுக்கொண்டு இருப்பவர்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காட்டிக் கொடுக்கும் துரோகி முகாமருகே சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு காட்டிக் கொடுத்த துரோகி ஒருவர் விடுதலைப் புலிகளால் முகாமருகில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த 6ஆம் திகதி மாலை 5 மணியளவில் உன்னிச்சை இராணுவ முகாமிலிருந்து காட்டிக் கொடுத்தவரான உன்னிச்சையைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கந்தையா மகேந்திரன் (வயது 30) என்பவரே முகாமிலிருந்து சுமார் 150 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

## பொலிசாருக்கு பெண் வெந்நீர் வீச்சு

(கொழும்பு)

அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை அவரை பெண் ஒருவர் மறித்து கொதி நீரை வீசியதில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறையில் நடைபெற்ற இச் சம்பவத்தில் கான்ஸ்டபிள் ரசீத் என்பவரே கொதிநீர் வீச்சிற்கு உள்ளானவராவார். இச்சம்பவம் தொடர்பாக ராமத்தும்மா என்ற பெண் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## ரெலோ, ராணுவத்தினரால் பொது மகன் சுட்டுக்கொலை

சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோவும் இணைந்து சிவில் உடையில் சென்று பொதுமகன் ஒருவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் ஒன்று கடந்த 11-ம் திகதி பி.ப. 1-30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

சம்பவதினம் உழவு இயந்திரத்தில் வந்த கொக்கட்டிச்சோலை முகாம் இராணுவத்தினரும் ரெலோவினருமே மாவடி முன்மாரி எனும் இடத்தில் வைத்து ஆரசடித்தீவு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை சின்னவன் (வயது 24) என்பவரையே சுட்டுக் கொன்றுள்ளனர்.

## கோயிலுக்கு சென்ற பெண் கழுத்து வெட்டிக்கொலை

(மகிளூர்)

அயலவருடன் கோவிலுக்குச் சென்ற பெண் மறுநாள் காலை கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இறந்து கிடந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது கடந்த பத்தாம் திகதி இரவு மகிளூர் எனும் கிராமத்தைச் சேர்ந்த ரஞ்சி (வயது 17) எனும் இளம் பெண் அயல் வீட்டாருடன் கோவிலுக்குச் சென்றுள்ளார். பின்னர் இவரது தாயார் அயலவரிடம் தனது மகளைப்பற்றி விசாரித்த பொழுது அவர் அங்கு வரவில்லை என அவர்கள் கூறியுள்ளனர் மறுநாள் காலை இவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இறந்து கிடந்தார் இச்சம்பவம் மகிளூர்பகுதியில் பெரும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## தடுப்பு ஊசி மருந்துகளுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தடுப்பு ஊசி மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக வைத்திய வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இத் தட்டுப்பாட்டினால் தடுப்பூசிகளை ஏற்ற முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் இதனால் பொதுவாக குழந்தைகளே பெருமளவில் பாதிக்கப்பட இருப்பதாகவும் மருத்துவ வட்டாரங்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றன.

போலியோ தடுப்பு மற்றும் முக்கூட்டு மருந்து எனப்படும் ஏற்பு, தொண்டைக்கரப்பான், குக்கல் போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் விசேடமாக குழந்தைகள் மிகவும் பாதிப்படையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் காலதாமதமின்றி இதனைப் பெற்றுத்தர முயற்சி மேற்கொள்வதன் மூலம் இந்த நோய்களின் தாக்கத்திலிருந்து குழந்தைகளையும் மகப்பேற்றை எதிர் நோக்கியிருக்கும் தாய்மாரையும் பாதுகாக்க முடியுமெனவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி),(க)

### யாழ். குடாநாட்டிற்கான

களைக் கண்டுபிடிப்பதற்கு உபயோகிக்கப்படும்.

சில நோய்களை இனம் காண்பதில் உள்ள சிக்கலைப்

இக் கருவிகள் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டது. (தி, பா)

களை வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுள்ளது. (17)

ராவார். இச்சம்பவம் தொடர்பாக ராமத்தும்மா என்ற பெண் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மூக்கூட்டு மருந்து ஏற்பு, தொண்டைக்கரப்

துள்ளன. (நி),(க)

### மலேரியா

னங்கள் எல்லாமே இந்நோயை தடுப்பதற்கான செயல்பாட்டில் இறங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மலேரியா நுளம்புகளை அழிப்பதற்கான மலத்தியோன் வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ள நேரத்தில் இந்நோயைத்தடுக்க அல்லது கட்டுப்படுத்த மாற்று வழியை ஏற்பாடு செய்வதற்கு சகலரும் தயாராக வேண்டும் என்றும் கோரப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலையில் மலேரியா நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. கெமக்குயின், குலராகுயின் என்ற குளிகைப் பொருள்களைக்கூடசுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு அலுவலகத்திடமிருந்து கடன் பெற வேண்டிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை உள்ளது

குறிப்பாக யாழ். நகரப் பகுதியில் மலேரியா நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. திறந்த மலக்குழிகள், பாழடைந்த வடிகால்கள், குட்டைகள், கிடங்குகள், சாக்கடை நீர் தேங்கும் கால்வாய்கள் என ஏராளமான நுளம்புப் பெருக்கத்திற்குரிய இடங்கள் உண்டு.

யாழ். போதனா வைத்திய சாலையைச் சுற்றியே துர்நாற்றம்வீசக் கூடிய கால்வாய்களும் பாழடைந்த வடிகால்களும் நிறைய உண்டு.

வைத்தியசாலை நிர்வாகமோ அல்லது யாழ். மாநகர சபை நிர்வாகமோ இது பற்றிய அக்கறையில்லாமல் மௌனம் சாதிக்கின்றன.

எதிர்கால சந்ததி நலிவடைவதற்கு அல்லது அழிவதற்கு இந்த மலேரியா நோய் முக்கியமான காரணி என பல வைத்திய அதிகாரிகள் தெரிவித்திருக்கும் இவ்வேளையில் மலேரியா தடுப்பு வாரம் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (தி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**13.03.94**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1240

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

43-2666, 42-3726, 24-7672, 41-6177, 22-8075, 26-1253, 28-4501, 24-1797, 41-7693, 41-8449, 28-6623, 26-6264, 28-1706, 26-8138, 27-9756, 26-4896, 28-3735, 26-9201, 27-9833, 24-7992.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

40-5216, 41-8617, 24-9596, 24-7628, 26-3654, 26-4683, 26-0736, 42-9326, 24-9773, 27-5633, 26-9140;

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "சமநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஈ.பி.டி.பி. முகாமில் குண்டுவெடிப்பு உறுப்பினர் ராணுவத்தால் கைது

(மட்டக்களப்பு)

மண்டூர் ஈ.பி.டி.பி. காரியாலயத்தில் நடந்த குண்டுவெடிப்பைத் தொடர்ந்து அனைத்து ஈ.பி.டி.பியினரும் விசேட அதிரடிப்படையினரால் முகாமுக்கு அள்ளிக்கொண்டு செல்லப்பட்டனர்.

கடந்த 7-ம் திகதி இரவு பத்துமணியளவில் ஈ.பி.டி.பியின் காரியாலயத்தில் குண்டொன்று வெடித்தது. இதன்போது அதற்குள் இருந்த பல ஈ.பி.டி.பியினர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து மறுநாள் காலைவெல்லாவெளி, அன்னமடு, 13-ம் கிராமம் ஆகிய முகாம்களைச்சேர்ந்த சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் திடீரென மேற்படி காரியாலயத்தைச் சுற்றிவளைத்து அனைவரையும் கைதுசெய்து மண்டூர் விசேட அதிரடிப்படை முகாமில் வைத்து விசாரணைக்குட்படுத்திய பின் மீண்டும் அங்கிருந்து காரைதீவு முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

### டி. பி. விஜேதுங்கா

துள்ளது.

நேற்று தொடக்கம் இம்மாதம் இருபத்திஒராம் திகதி வரை நடைபெறவுள்ள இத்தேர்தல் பிரசாரத்தில் தென் மாகாண சபை அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, எதிர்கால திட்டங்கள் என்பன பற்றி ஐ.தே.க தனது நிலைப்பாட்டை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை பொது ஜன ஐக்கிய முன்னணியின் தென்மாகாணசபை தேர்தலின் பிரதான பிரசார பொதுக்கூட்டங்கள் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் மூன்று கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. இதில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மேல் மாகாணசபை முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்கா கலந்துகொள்ள இருக்கின்றனர்.

### வலிவடக்கு

பகுதிகள் மீது குண்டுவீச்சு விமானங்கள் இடையிடையே குண்டுகளை வீசின. உலங்கு வானூர்தி ஒன்றும் அக்குடியிருப்புகள் மீது பரவலாக சுட்டது. பிற்பகல் 1-20 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து வலாய் நோக்கி பல ஆட்லறி ஷெல்கள் வீசப்பட்டன. இச்ஷெல்கள் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன- (யோ)

### சமனலவேவ

சிறிலங்காப் பொறியியலாளர் இத்திட்டம் சாத்தியப்படாது என்று கருத்துவெளியிட்டது தெரிந்ததே சமனலவேவ அணைத்திட்டத்துக்கும் பக்கத்தில் கட்டப்பட்ட நீர் தேக்க அணைக்கட்டில் ஒழுக்கு இருப்பதால் இப்பொழுதும் அது நீரால் நிரப்பப்படாது உள்ளது.

### இப்படியும்

எனினும் இந்தப் பெண் கர்ப்பம் தரித்த காலம் முதல் கிளினிக்குகளுக்கு ஒழுங்காக சென்று வந்த போதும் எந்த டாக்டரும் இரு குழந்தைகள் இருப்பது பற்றி இவருக்கு தெரிவித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### தையற்கண்காட்சி

(மல்லாகம்)

உடுவில் பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட தையற் பயிற்சி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், தையற் பயிற்சிக் கண்காட்சியும் எதிர்வரும் 20-ம் திகதி இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. அடுத்த தொகுதி தையற் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளது. இம்மாத முடிவினுள் மேற்குறித்த பயிற்சிக்கான விண்ணப்பங்களை உடுவில் பிரிவு செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (09)

### ஆகதி

யில் சேர்த்தார். இவருடைய உடலின் 63 வீதமான பகுதி முற்றாக எரிந்துவிட்டதாக மருத்துவ பரிசோதனை கூறியது. இரு நாட்களாக உணர்வு மயங்கிய நிலையில் இருந்த இவர் இன்னமும் ஆபத்தான நிலையிலேயே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை கண்டித்துள்ள தமிழர்களின் சர்வதேச கூட்டமைப்பு, இலங்கைக்கு பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவதை விட தீக்கு இரையாவது மேல் என அவர் விரும்பியது இலங்கையின் தற்போதைய யதார்த்த நிலையை காட்டுவதாக உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டிற்கான

# தபாற்சேவை சீரின்மைக்கு அதிகாரிகளே காரணம்

யாழ் குடாநாட்டுக்கான தபால்விநியோகம்யாழ் குடாநாட்டு மக்களை பொறுத்தவரை அத்தியாவசிய சேவையாக விளங்குகின்ற போதிலும் இச்சேவையும் அத்தியாவசிய சேவையாக கருதுவதற்கு தபால் திணைக்கள அதிகாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

யாழ் குடநாட்டுக்கான வெளித் தொடர்புகள் பல துண்டிக்கப்பட்டிருக்கும் இக்காலகட்டத்தில் தபால் விநியோகம் சீராக நடைபெற்றாலே குடாநாட்டு மக்கள் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட வசதியாக இருக்கும் இவ்வாறான பொதுக்கருத்தை குடாநாட்டு மக்கள் கொண்டிருக்கின்றனர் அத்துடன் தபால் விநியோகம் சீராக்கப்படவேண்டும் என்றும் இத் தபால் சேவை மிகவும் அத்தியாவசியசேவை என்றும் குடாநாட்டு மக்கள் கருதுகின்றனர்.

இவ்வாறான குடாநாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறாக தபால் சேவை சீர்குலைந்துபோய் உள்ளது. இத் தபால் சேவையை சீராக்குவதற்கு தபால் திணைக்கள அதிகாரிகள் பல தடவை முயற்சி செய்ததாகக் கூறியுள்ளனர். ஆனால் இதுவரை குடாநாட்டுக்கான தபால் விநியோகம் சீராக்கப்படவில்லை.

கடந்த மாதம் 23-ம் திகதி கொழும்பில் நடைபெற்ற புனர்வாழ்வு இணைப்புக் குழுக் கூட்டத்தின்போதும் யாழ். குடாநாட்டுக்கான தபால் விநியோகத்தை சீராக்குவது குறித்து ஆராயப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அத்தியாவசிய சேவைகள் பிரிவு அதிகாரிகள் குடாநாட்டுக்கான தபால் விநியோகத்தை ஒரு அத்தியாவசிய சேவையாக கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர். மேற்படி கூட்டத்தின்போது இத்தபால் விநியோகத்தை சீராக்கும் ஒரு நடவடிக்கையாக ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி கொழும்பில் இருந்து குடாநாட்டிற்குச் செல்லும் ஒவ்வொரு கப்பலிலும் தபால் பொதிகளை எடுத்துச் செல்லுவது என்று தீர்மானிக்கப்பட்டது

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் குடாநாட்டுக்கான தபால் விநியோகம் சீராகும் என்று எதிர்பார்க்க முடியும்.

ஆனால் கொழும்பில் உள்ள தபால் திணைக்கள அதிகாரிகள் குடாநாட்டுக்கான தபால் சேவையை ஒரு அத்தியாவசிய சேவையாகக் கருதுவார்களா என்பது சந்தேகமாக உள்ளது அவ்வாறு கருதப்பட்டு அத்தியாவசிய சேவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும்கூட யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் தபால் திணைக்கள உயர் அதிகாரிகள் மேற்படி திட்டத்தின்படி தபால்பொதிகளைஒவ்வொரு கப்பலிலும் ஏற்றி வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதிலும் மேற்படி திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களா என்பதிலுமே குடாநாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகிய தபால் சேவையின் எதிர்காலம் தங்கியுள்ளது. (க)